Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10703) விநாயகர் வீதி, மல்லிகட்டி.

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-03 | 18-11-2004 | வியாழக்கிழமை | ஓசை -274

# யுத்தநிறுத்த நடைமுறைகள் சம்பந்தமான தீர்மானங்கள் குறித்துப் பேசினோம்!

## கண்காணிப்புக்குழுத்தலைவருடனான சந்திப்புக்குறித்து அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**சமாதான உடன்படிக்கை சம்பந்தமாகவும் அதனை மேலும் பலப்படுத்துவது சம்பந்தமாகவும் ஏற்கனவே தேசியத்தலைவருக்கும், நேர்வே அனுசரணையாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது யுத்த நிறுத்த நடைமுறைகள் சம்பந்தமாக, எடுக்கப்பெற்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்ட முடிவுகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டன. இவ்வாறு நேற்று விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் கண்காணிப்புக் குழுத்தலைவர்களுடனான சந்திப்பினையடுத்து செய்தியாளர்களின் கோள்விக்குப் பதிலளிக்கையில் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறூவ் கொவ்டேயும் குழுவினரும் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு



நேற்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்பு நேற்று முற்பகல் 10.00 மணிமுதல் 11.00 மணி வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம் பெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் , விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறூவ் கொவ்டேயும் குழுவினரும் கலந்து கொண்டனர். (சோ,சு)

# தமிழீழத் தேசியத் தலைவருக்கு வெற்றிக் கேடயம் வழங்கல்

தமிழீழத் தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்தநாளை முன்னிட்டுதேசியத்தலை வருக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும், யாழ்.மத்திய கல்லூரி சமூகத்தினரும் வாழ்த்துச்செய்தி அடங்கிய கேடயத்தினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களிடம் கையளித்த நிகழ்வு நேற்றுக்காலை 11.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ அரசி

(12ஆம் பக்கம் பார்க்க)



பல்கலை மாணவர்கள்



யாழ். மத்தியகல்லூரி சமூகத்தினர்

# திருமலை,நாகர்கோவில் விவகாரங்கள் பேச்சுக்களில் முக்கிய இடம்பெற்றன

**-யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு பேச்சாளர்**

ஒருசில விடயங்கள் பற்றி நாம் தெளிவாகக் கூறவேண்டும். திருகோணமலைப் பகுதியில் விடுதலைப்புலிகள் தமது நிலைகளை வலுப்படுத்தி வருகின்றார்கள் என்பதாக இலங்கை இராணுவத்தரப்புக் குற்றம் சுமத்தியது தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையின் போதுபேசப்பட்டது. அதைத் தவிர யாழ். குடாநாட்டில் நாகர் கோவில் பகுதியில் இரண்டு தரப்பு முன்னணி நிலைகளும் வெகு அருகில் இருப்பது பற்றியும் இதன்போது பேசப்பட்டது.

ஆனால் இந்த இரண்டு விடயங்கள் பற்றியும் முடிவேதும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் கர்ப்பிணிப் பெண் குரூரமான முறையில் குத்திக் கொலை

(செட்டிகுளம்)

வவுனியாவில் கர்ப்பிணித்தாய் கொடூரமான முறையில் இனம் தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் வவுனியா குடாகச்சக்கொடி பிரதேசத்தில் மேற்படி சம்பவம் நேற்று முன் தினம் மதியம் இடம் பெற்றுள்ளது இச்சம்பவத்தில் இனம் தெரியாத நபர்களால் வெட்டிக்கொல்லப்பட்ட பெண் மாலினி குசுமாலதா (வயது 33) என்று அடையாளம்காணப்பட்டுள்ளது

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசாரணைகளினை உடன் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியாப் பொலிசாருக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுப்படைத் தலைமை அதிகாரி தயாசந்தகிரி நேற்று யாழ்.வருகை

**முகமாலை சென்றதால் போக்குவரத்துத் தடை**

கூட்டுப்படைகளின் கட்டளைத் தலைமையக அதிகாரியாக பொறுப்பேற்றுள்ள தயாசந்தகிரி குடாநாட்டிற்கு நேற்று வருகை தந்துள்ளார்.

பலாலித் தளத்தினில் வைத்து இலங்கை இராணுவத்தின் யாழ். மாவட்ட தலைமையுடனும் மற்றும் கடற்படை, விமானப்படை பிராந்திய தளபதிகளுடனும் அவர் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

எந்த ஒரு நெருக்கடி நிலை தோன்றினாலும் அதனை எதிர்கொள்ள முப்படைகளைச் சேர்ந்தவர்களும் தயாராக இருக்க வேண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின்குரல் சிறப்பு ஒலிபரப்பு

புலிகளின் குரல் வானோசை 14 இன் சிறப்பு ஒலிபரப்பு 20.11.2004 அன்று காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரையும் இடம்பெறும். அன்று புலிகளின்குரல் அமலன் அரங்கில் நடைபெறும் 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் நேரடி அஞ்சலை மாலை 4.00 மணியிலிருந்து நேயர்கள் கேட்கலாம். தொடர்ந்து புலிகளின்குரலின் மாவீரர் எழுச்சி நாள் சிறப்பு ஒலிபரப்பு 21.11.2004 லிருந்து - 25.11.2004 வரை மாலை 3.00 மணி வரையும் தொடர்ந்து இரவு 7.00 மணி முதல் 10.00 மணிவரையும் சிறப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் -27

**"மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திர சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்."**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்

### அறிவித்தல்

அப்பன் இரும்புத் தொழிலகம் டிப்போ வீதி,கிளிநொச்சி (மாவீரர் துயிலுமில்லவீதி) சுருக்குக்கேற் மற்றும் சகலவிதமான கேற்வகைகள். யன்னல் கிறில்றைஸ் போன்றவை செய்துகொடுக்கப்படும்.

(சி-10756)

## அடிக்கல் நாட்டுவிழா

மன்னார் புதுக்கமம் பகுதியில் பொதுமடண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று இடம்பெற்றது.

இவ் அடிக்கல்லை மன்னார் பிரதேசசெயலாளர் வரதீஸ்வரன் அவருடன் இணைந்து புதுக்கமம் கிராம உத்தியோகத்தர் உட்பட பலர் நாட்டிவைத்தனர். (மி)

## மட்டக்களப்பில் வெள்ளத்தினால் 40 ஆயிரம் குடும்பங்களுக்குப் பாதிப்பு

(கொழும்பு)

அண்மையில் பெய்த கடும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் நாற்பதாயிரம் குடும்பங்கள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்கள் பல வெள்ளத்தில் மூழ்கி உள்ளதாகவும், தமது அன்றாட் கடமைகள் எதனையும் செய்ய முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண்முனை வடக்கு, காத்தான்குடி, வவுணதீவு, வாழைச்சேனை ஆகிய பகுதிகளே வெள்ளத்தில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தமக்கு அரசாங்கத்தின் எந்தவித உதவியும்கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டாயிரத்து மூன்றாமாண்டு 1872 மில்லி மீற்றர் மழை பதிவாகி உள்ள அதேவேளை இவ்வாண்டு சனவரி முதல் இது வரை 1576 மில்லி மீற்றர் மழை பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சுகாதாரத் திணைக்களம் நடாத்தும் கட்டுரைப் போட்டி

- தலைப்பு :- எயிட்ஸ் நோயிலிருந்து எம்மையும், எமது பிரதேசத்தையும் பாதுகாப்போம்.
- அளவு :-300 சொற்களுக்கு மேற்படாமல்
- வயதெல்லை :- சகலரும் பங்குபற்றலாம். (சுகாதாரத் திணைக்களத்திற்குட்பட்ட ஊழியர்களோ, அவரது குடும்பத்தினரோ பங்குபற்ற முடியாது)
- முடிவுத்திகதி :- 25.11.2004. இற்கு முன்னர்கிடைக்கக்கூடியதாக தபாலிலோ அல்லதுநேரிலோ "பணிப்பாளர்,மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தபாலுறையின் இடது பக்கமேல்மூலையில் உலக எயிட்ஸ் தினம் கட்டுரைப்போட்டி எனக் குறிப்பிடவும்.

- டிசம்பர் 01 ஆம் திகதி பரிசளிப்பு நடைபெறும்.

01. ஆம் பரிசு - ரூபா 5000.00
02. ஆம் பரிசு - ரூபா 3000.00
03. ஆம் பரிசு - ரூபா 2000.00

**வைத்திய கலாநிதி**
**த.சத்தியமூர்த்தி,**
**பி.மா.சு.சே.ப.பணிமனை,**
**கிளிநொச்சி.**

(சி.10621)

## மன்னாரில் பெண்கள் தொடர்பான பகுப்பாய்வு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்று மன்னார் நகரிலுள்ள கிராம அலுவலர்களுக்கான பெண்கள் தொடர்பான பகுப்பாய்வு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம் பெற்றுள்ளது மன்னார் நகர பிரதேச செயலாளர் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் மன்னார் கச்சேரி திட்டமிடல் ஆய்வுப் பணிப்பாளர் அவர்கள் விரிவுரையாற்றினார். அத்துடன் யுத்த காலத்தில் பாதிப்புற்ற பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்,விவாகரத்து செய்துகொண்ட பெண்கள், கணவன் தற்கொலை செய்து அதனால் பாதிப்புற்ற பெண்கள் போன்ற குடும்பங்கள் தொடர்பான விபரங்களை எடுக்குமாறு விண்ணப்பங்களை வழங்கி விண்ணப்பங்கள் சம்பந்தமான புள்ளிவிபரங் களைத் திரட்டுமாறு தெரிவித்தார். (மி)

## புதுக்குடியிருப்பில் ஆண்டு 5- புலமைப்பரிசில் சித்தியடைந்தோருக்குப் பரிசளித்து கௌரவிப்பு

2004 இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்தும், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபரைப் பாராட்டியும் நேற்று முன்தினம் 11.00 மணிக்கு பாடசாலை முதல்வர் செ.ரவீந்திரராஜா அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் சிறப்பாக.. இடம்பெற்றன. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் க.குருகுலராஜா, புதுக்குடியிருப்பு கோட்ட கல்வி அதிகாரி ஜி.எஸ் பரமேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் க.குருகுலராஜா எற்றிவைத்தார் தொடர்ந்து பாடசாலைக் கொடியினை பாடசாலை முதல்வர் ஏற்றி வைத்தார். இதனையடுத்து பாடசாலை மாணவர்கள் சான்றிதழும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பெற்றோரால் பாடசாலைக்கு அன்பளிப்புப் பொருட்களும் வாழ்த்துப் பாவும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்புரையை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் க.குருகுலராஜா அவர்கள் ஆற்றினார். (08)

## வன்னி வாடகைக்கார் உரிமையாளர் துயிலுமில்லங்களிச் சிரமதானம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு வன்னி வாடகைக்கார் உரிமையாளர் கழகத்தினர் வன்னியில் உள்ள மாவீரர் துயிலும்இல்லங்களில் நேற்று சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். முள்ளியவளை, விசுவமடு, மல்லாவி, கிளிநொச்சி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களில் வன்னி வாடகைக்கார் உரிமையாளர்கள் சிரதானப் பணிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை முல்லை மாவட்டத்தில் மாவீரர் நாளை மிகவும் எழுச்சியாக கொண்டாடுவதற்கான தீவிர ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன இது சம்மந்தமான முக்கிய கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் கடந்த 15 ஆம் திகதி புதுக்குடியிருப்பிலும், 16 ஆம் திகதி ஆலங்குளம் பகுதியிலும் 17 ஆம் திகதி முள்ளியவளையிலும் அதேதினம் இரவு 7.00 மணிக்குப் புதுக்குடியிருப்பில் உள்ள மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் மாவீரர் தினத்தன்று மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களை அழைத்துச் செல்வதற்கான வாகன ஒழுங்குகள் தொடர்பான ஒரு முக்கிய கலந்துரையாடல் இடம் பெற்றது. (08)

## கௌரவிக்க ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி வவுனியா மாவட்டத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகர பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு முத்தையா மண்டபத்தில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் 11.00 மணிக்கு புதுக்குளம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இதேபோன்று கோயிற்குளம், செட்டிகுளம் பிரதேசங்களின் மாவீரர்களின் பெற்றோர்களையும் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்துள்ளார்.(10)

## சாவு அறிவித்தல்



### அமரர்செல்வரத்தினம் சுகிர்தன் (திவாகர்)

தண்ணீரூற்று மாமூலை முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 223, சில்வாவீதி, வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட "செல்வரத்தினம் சுகிர்தன் (திவாகர்)" 16.11.2004 ஆம் திகதி காலமானார். இவர் செல்வரத்தினம் பத்மாவதி தம்பதிகளின் கனிஷ்ர புத்திரரும், ஜனனி (தூயமணி முன்பள்ளி ஆசிரியை வட்டக்கச்சி)யின் அன்புக் கணவரும், லிபிசன், டிலக்சன் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (ஈசன்), சித்திராதேவி (சித்திரா, ஆயுள்வேத வைத்தியர் வட்டக்கச்சி ஆகியோரின் அன்பு மருமகனும், செல்வரதன் (பிரான்ஸ்), செல்வலதன்,(அமரர்) சுதர்சன் (அமரர் ) சுதர்மினா, (மாவீரர்) சுதர்சனா(கல்ப்பனா லண்டன், முன்னைநாள் வட்டக்கச்சி மகாவித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் சகோதரரும், கலாமோகன், சோதிகா ஆகியோரின் மைத்துனரும், கணேசராஜன் (கரைச்சி பிரதேசசபை)னின் சகலனும், ஆரணி (லங்கா சித்த மருத்துவக் கல்லூரி மாணவி யாழ்ப்பாணம்), கஜன் (மனிதநேய கண்ணி வெடிப்பிரிவு கிளிநொச்சி), நிலானி(வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18.11.2004ஆம் திகதி இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு பிற்பகல் 2.00மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்,
குடும்பத்தினர்.

(5286)

## சாவு அறிவித்தல்

### மரியாம்பிள்ளை யோசேப்

தாளையடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளைப்பாறிய கிராமசேவகருமான மரியாம்பிள்ளை யோசேப் அவர்கள் 16.11.2004 ஆம் திகதி அன்று அகாலச் சாவடைந்துள்ளார். இவர் காலம் சென்ற கபிரியல் மாரியாம்பிள்ளை, எபலீசம்மா ஆகியோரின் அன்பு மகனும், மேரிபிலோமினாவின் அன்புக் கணவரும், எமில்ராஜன், ஆன்ஸ்றஜினி டொனால்ட்றீகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியமலர், செபமாலை லீலிமலர், யசிந்த ஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும். ஜோர்ஜ் ஜெயக்குமார் மேரி அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், டனிசியனின் அன்புப் பேரனுமாவார்.

இவரது பூதவுடல் தாளையடியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின் தாளையடிப் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியுடன் தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:-
(மகன்) எமில்ராஜன்.

(5287)

# ஈராக்-ஆப்கான் போர்களின்போது அமெ.சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்தியது

–சிறுவர்கள் நலன்காக்கும் பாதுகாப்பு அமைச்சர்கள்

(லண்டன்)

**அமெரிக்கா ஈராக்மீதும், ஆப்கானிஸ்தான்மீதும் போர்தொடுத்த ஆரம்ப காலத்தில் பதினெட்டு வயதிற்கும் குறைந்த சிறார்களை யுத்தத் தில் ஈடுபடுத்தியுள்ளதாக சிறார்களை யுத்தத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான கூட்டணி கூறியுள்ளது.**

அமெரிக்க இராணுவம் இவ்விரு நாடுகள் மீதும் யுத்தத்தை ஆரம்பித்த காலப்பகுதியில் பதினேழு வயதே நிரம்பிய அறுபத்து இரண்டு சிறார்களை யுத்தத்தில் ஈடுபடுத்தியதாக சிறார்களை யுத்தத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான அந்தக் கூட்டணி கூறியுள்ளது.

இந்தக் கூட்டணியில் சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனங்களான அம்னஸ்ரி இன்ரநஷனல் மற்றும் கியூமன்றைஸ் பொட்டும் தொண்டு நிறுவனங்களான சேவ்த சில்றன் மற்றும் வேள்விஷன் ஆகியன அங்கம் வகிக்கின்றன.

பிரிட்டன் போன்ற சிறு எண்ணிக்கையான நாடுகள் பதினாறு வயதுச் சிறார்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்கின்றன எனவும், அவர்களைப் பதினெட்டு வயது பூர்த்தியாகும்வரை மோதல தளங்களுக்கு அனுப்புவதில்லையென வாக்குறுதி அளித்து படையில் சேர்த்துக் கொள்வதாகவும், இந்த வழக்கமும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பதினெட்டு வயதிற்குக் குறைவானவர்கள் எவரும் இராணுவத்தில் இருக்கக் கூடாது என்ற நிலை உருவாக வேண்டும். அப்போதுதான் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அமெரிக்கப்படையினருக்கு நிகழ்ந்ததைப் போன்ற நிகழ்வு வருவதைத் தடுக்க முடியும் எனவும் இந்தக் கூட்டணி கூறியுள்ளது.



பிரேசிலிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள தென்கொரிய சனாதிபதி றோமூ – கையன் (வ) பிரேசில் சனாதிபதி ஜோஸ் சானி(இ) மத்தியில் பிரேசில் தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் நிற்பதையும் காணலாம்.



பிலிப்பைன்சின் முன்னாள் சனாதிபதியின் குடும்பத்திற்குச் சொந்தமான பண்ணை வேலையாளர்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதையடுத்து கோபமடைந்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிடுகின்றனர்.

–ஈராக் தீவிரவாதிகளால்–

# கடத்தப்பட்ட பெண் அதிகாரி ஒருவர் கொல்லப்படும் காட்சி அனுப்பிவைப்பு

ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தில் வைத்து கடந்த மாதம் 19 ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சர்வதேச மனிதாபிமான நிறுவனமொன்றின் பெண் அதிகாரி கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மார்க்கிரட்ஹசன் என்ற இவர் கொல்லப்படும் காட்சிகள் ஒலிநாடா மூலம் வெளியிடப்பட்டுள்ளன. இதனைத் தாம் ஆராய்ந்து பார்த்ததில் அவை உண்மையானவை எனப் புலப்படுவதாக பிரிட்டிஸ் வெளிநாட்டமைச்சர் ஜக்ஸ்றோ தெரிவித்துள்ளார்.

இவரை விடுவிக்குமாறு பிரிட்டன், அயர்லாந்து ஆகிய இரண்டு நாடுகளும் கூட்டாக கோரிக்கை விடுத்த போதிலும் இதனைத் தீவிரவாதிகள் நிராகரித்திருந்தனர்.

இந்நிலையில் மார்க்கிரட் ஹசன் கொலை செய்யப்பட்ட காட்சிகளை ஈராக்கிய தீவிரவாதிகள் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு அனுப்பியுள்ளனர். இந்த ஒலிநாடா தம்மிடம் சில நாட்களுக்கு முன்னரே வந்து சேர்ந்த போதிலும் உண்மைத் தன்மையை ஆராயாமல் தாம் ஒலிபரப்பப் போவதில்லை என அல்ஜசீரா தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

கடத்தற்காரர் ஒருவர் மார்க்கிரட் ஹசனின் தலையில் சுடும் காட்சிகள் ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அல்ஜசீரா அறிவித்துள்ளது.

இந்த ஒலி நாடாவை ஆராய்ந்த பிரிட்டிஸ் இராணுவத்தினரும், வெளிநாட்டமைச்சர் ஜக்ஸ் றோவும் இந்த ஒலிநாடாவில் வெளிவந்த காட்சிகள் உண்மையானவை என்று உறுதி செய்துள்ளனர். அயர்லாந்து, பிரிட்டன், ஈராக் ஆகிய 3 நாடுகளிலும் மார்க்கிரட் ஹசன் குடியுரிமை பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

### ஜோர்தானில் பயிற்சிபெற்றுத் திரும்பிய 30 ஈராக் பொலிசார் கடத்தல்

ஜோர்தானில் தமது பயிற்சியை முடித்து விட்டு திரும்பிய 30 ஈராக்கியப் பொலிசார் மேற்கு ஈராக்கில் வைத்து கடத்தப்பட்டுள்ளனர். ஜோர்தான் எல்லையில் வைத்து 20 ஆயுத தாரிகளினால் இவர்கள் கடத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் 9 ஈராக் பொலிசார் இவ்வாறு ஜோர்தானில் தமது பயிற்சியை முடித்துவிட்டுத் திரும்பும்போது கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

# அமெரி.பிரதி இராஜங்கச் செயலர் ஆர்மிரேஜ் இராஜினாமா

அமெரிக்க பிரதி இராஜாங்க செயலர் ரிச்சட் ஆர்மிரேஜ் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் ரிச்சட் பவுஜர் தெரிவித்துள்ளார்

அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின்பவலின் இராஜினாமாவுடன் சேர்த்து ஆர்மிரேஜின் இராஜினாமாவும் சமர்ப்பிக்கப்பட்டதாக புதிய இராஜாங்க செயலர் கொண்டலினாரைஸ் உறுதிசெய்துள்ளதாக ரிச்சட் பவுஜர் தெரிவித்துள்ளார்.

ரிச்சட் பவுஜர் மேலும் தெரிவிக்கையில் பொதுவாக எவரிடமும் இராஜினாமாவைச் சமர்ப்பிக்குமாறு கோரிக்கைகள் விடப்படவில்லையென்றும் எனினும் ஒவ்வொருவரும் தத்தமது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் இராஜினாமாவைச் சமர்ப்பித்ததாகவும் பவுஜர் கூறினார்.

# ஏனைய வல்லரசுகளிடமில்லாத புதியவகை அணுவாயுத ஏவுகணை ரஷ்யா வடிவமைப்பு

–ரஷ்ய சனாதிபதி தெரிவிப்பு

ஏனைய வல்லரசுகள் கொண்டிராத புதிய அணுவாயுத ஏவுகணையை வடிவமைக்கும் முயற்சிகளில் ரஷ்யா ஈடுபட்டு வருகிறதென சனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் உருவாகும் பாதுகாப்புத் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதே இம்முயற்சியின் நோக்கமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஏவுகணை தொடர்பான ஆய்வுகளும் சோதனைகளும் நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.அத்துடன் புதிய ஆயுதங்கள் எந்த வடிவத்தைச் சேர்ந்தவை போன்ற விடயங்களை அவர் தெரிவிக்கவில்லை.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 10 கொலம்பியப் பொலிசார் பலி

கொலம்பியாவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் அரசாங்கக் காவல்துறையினர் 10 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

தேசிய விடுதலை இராணுவம் என்ற போராளி இயக்கமே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இயக்கம் கொலம்பியாவில் மிகப் பெரிய இரண்டாவது இயக்கம் என்று கருதப்படுகின்றது. இந்த இயக்கத்தில் சுமார் 100 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

# பிரேசிலில் துறைமுகம் அருகே தரித்து நின்ற கப்பல் வெடித்தது

20 பேர் காயம்; நால்வரைக் காணவில்லை

பிரேசில் நாட்டிலுள்ள பராகுவா துறைமுகத்தினருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "விக்குனா" என்ற கப்பல் நேற்று முன்தினம் திடீர் என்று வெடித்ததில் கப்பலில் இருந்தவர்களில் 20 பேர் படுகாயமடைந்ததோடு மேலும் 4 பேர் காணாமற் போயுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் பற்றி தெரியவருகையில் துறைமுகத்திலிருந்து "மெக்வால்" என்ற இரசாயனப் பொருள் கப்பலுக்குள் நிரப்பிக்கொண்டிருக்கும்போது திடீர் என்று கப்பல் வெடித்து மூழ்கியுள்ளது.

உடனடியாக எடுக்கப்பட்ட பல முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக அதன் அருகே நின்ற பல எண்ணெய்க் கப்பல்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் காணாமற் போன 4 பேரும் இறந்திருக்கலாமென்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக அந்நாட்டு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பலூஜாவில் சக்லவியா நகருக்குட் செல்லும் பாதையில் அகதிகளுக்கான பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனம் ஒன்றை நிறுத்திப் பரிசோதிக்கும் அமெரிக்கப்படையினர்.

# மாவோ கிளர்ச்சியாளர் தாக்குதல் எட்டு நேபாளப் பொலிசார் பலி

மேற்கு நேபாளத்தில் மாவோ கிளர்ச்சியாளர்களினால் வைக்கப்பட்ட நிலக்கண்ணியிற் பொலிஸ் வாகனம் ஒன்று சிக்கியதில் எட்டு பொலிசார் உயிரிழந்துள்ளனர்.

கிளர்ச்சிக்காரர்களினால் தடைசெய்யப்பட்டிருந்த பாங்,டாங் மாவட்டங்களிற்கு இடையேயான வீதியைத் திறப்பதற்காக பாதுகாப்புப் பிரிவினர் சென்றபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.



ஐவரிக்கோஸ்டில் பிரான்ஸ் நாட்டவர் ஒருவரின் வீட்டின் முன் ஒருகார் எரிவதையும் இனந்தெரியாத நபர் ஒருவர் அதைக்கடந்து விரைவாக நடந்து செல்வதையும் காணலாம்.

# பிறிமா ஆலையால் கோதுமை மா வழங்கப்படவில்லை

# வவுனியா மாவட்ட நிவாரண விநியோகத்தில் தேக்கநிலை

## -வவு.ப.நோ.கூ.சங்க தலைவர்

(கொழும்பு)

**கடந்த மூன்று மாதங்களாக ஒழுங்கான முறையில் பிறிமா ஆலையால் கோதுமை மா வழங்கப்படாததன் காரணமாக வவுனியாவில் வழங்கப்படும் நிவாரணத்தில் தேக்கநிலை ஏற்பட்டு இருப்பதாக வவுனியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பூலோகசிங்கம் குமாரகுலசிங்கம் தெரிவித்தார்.**

வவுனியா மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் வாழ்ந்து வரும் 15,000 குடும்பங்கள் நிவாரணம் பெற்று வருவதாகவும் இவர்களுக்கு விநியோகிப்ப தற்கு மாதாந்தம் வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு 2 இலட்சத்து 30 ஆயிரம் கிலோகிராம் கோதுமை மா தேவைப் படுவதாகவும் தெரிவித்தார்.

தங்களால் பணம் கட்டப்பட்ட மாவும் இதுவரை வந்து சேரவில்லை என்றும் இது தொடர்பாக வவுனியா அரச அதிபர் பிரதேச செயலாளர்கள் பிறிமா ஆலையின் நிர்வாகத்தினருக்கும் அறிவிக்கப்பட்டிருப் பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கமே வவுனியா தமிழ் பிரதேச செயலாளர் பிரிவு, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவு,வவுனியா சிங்கள பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் வ்வுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றுக்கு திருகோணமலையில் இருந்து கோதுமை மாவினைப் பெற்று விநியோகித்து வந்தனர். தற்போதைய நடைமுறையின் கீழ் மக்கள் வங்கியில் பணத்தைச் செலுத்தி திருகோணமலைக்கு அறிவிக்க அவர்கள் வவுனியாவில் உள்ள தமது களஞ்சியத்திற்கு அறிவிப்பதாகவும், இதன் பின்னரே தாம் மாவினைப் பெற்று கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது எழுந்துள்ள நெருக்கடி காரணமாக மக்கள் தம்மீது பழி சுமத்துவதாகவும், ஆனால் தங்களில் எந்தவிதமான தாமதமும் இல்லை என்றும் மா வந்த உடன் நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக வவுனியா பிறிமா ஆலைக்கிளையுடன் தொடர்பு கொண்ட போது இருப்பில் மாவு இல்லை என்று தெரிவித்துள்ளனர். (21)

-எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த-

# சுகாதார சேவையினரால் திறந்த கட்டுரைப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

உலக எயிட்ஸ் தினத்தை யொட்டி கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனையினரால் எயிட்ஸ் விழிப்புணர்வினை ஏற் படுத்தும் முகமாக திறந்த கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

"எயிட்ஸ்நோயிலிருந்து எம்மையும் எமது பிரதேசத்தையும் பாதுகாப் போம் என்னும் தலைப்பில் 300 சொற்களுக்கு மேற்படாமல் மேற்படி கட்டுரையினை எழுதி, வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக பிரதிப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிமனை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளதுடன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெறும் கட்டுரைகளுக்கு முறையே 5000, 3000, 2000 ரூபா பரிசாக வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர். சுகாதார திணைக்கள ஊழியர் மற்றும் குடும்பத்தவர்கள் தவிர்ந்த சகலரும் இப்போட்டியில் பங்கு பற்றலாமென கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த..சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.(சோ,கு)

# கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரிப்பு

(மல்லாவி)

பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து காணப்படுகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதும் விவசாய நிலங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. (24)

## வீதி ஒழுங்கு விதிகள் குறித்து

# சென்.திரேசா மகளிர் கல்லூரியில் தமிழீழ காவல்துறை கருத்தூட்டல்

(கிளிநொச்சி)

சென்.திரேசா மகளிர் கல்லூரியில் தமிழீழ காவல் துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் வீதி ஒழுங்கு விதிகள் சம்பந்தமான கருத்தூட்டல் வகுப்பை நடத்தினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.00 மணி தொடக்கம் ஒரு மணித்தியாலம் இந்தக் கருத்தூட்டல் நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் அவர்களும், துணைப்பொறுப்பாளர் ஜீவானந்தன் அவர்களும் கருத் துரைகள் வழங்கினார்கள்.

இந் நிகழ்விற்குப் பாடசாலையின் அதிபர் தலைமை தாங்கினார் .இக் கலந்துரையாடலில் 400இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.



வட்டக்கச்சி நாவலர் வீதியைப் புனரமைத்த நியாப்திட்டத்தினர் வீதியில் நீர் போக்கி குழாய் வைக்காததால் தேங்கிய நீரை வெளியேற்ற வீதி குறுக்காகவெட்டப்பட்டுள்ளது. (படம்-ரூபன்)

# கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதை,கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழும், பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 10 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி க.சுபாசினி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன், முத்துஐயன் கட்டு ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் க.பாலேஸ்வரன் ஒட்டுசுட்டான் ம.வி. ஆசிரியர் திருமதி துரைசிங்கம் ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழ தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் கதிர் ஏற்றினார். தொடர்ந்து கருத்துரைகளை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி.க.சுபாசினி, ஒட்டுசுட்டான் பிரதேச கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன், ஒட்டுசுட்டான் பிரதேசஅரசியல் துறைப் பொறுப்பாளர்கதிர், பிரிவு அபிவிருத்திக் குழுத்தலைவர் வை. சிவஞானலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

சிறுவர் பராமரிப்பு நன்நடத்தை தொடர்பாக சிறுவர் பராமரிப்பு நன்நடத்தை உத்தியோகத்தர் வி.சிவபாலசுப்பிரமணியம், நிகழ்த்தி நன்றியுரையினையும் வழங்கினார்.

வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்வழங்கி கௌரவிக்கப் பட்டனர். இதில் கட்டுரைப் போட்டி பிரிவு ஒன்று முதலாம் இடம் ப.பிரதீபா கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, 2ஆம் இடம் யோ.சாமினி முத்துஐயன் கட்டு வலதுகரை அத.க. பாடசாலை, 3ஆம் இடம் க.எழிலினி ஒட்டுசுட்டான் ம.வி.

பிரிவு ஒன்று கவிதை 1ஆம் இடம் சப்தனவரன் கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலை,2ஆம் இடம் சி.சஜிபன் கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலை,3ஆம் இடம் தே.ஜிவிதா சம்மளங்குளம் அ.த.க. பாடசாலை, பிரிவு இரண்டு கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடம் சி.அன்ரனி கஜேந்திரன் முத்துஐயன் கட்டு வ.க.அ.த.க.பாடசாலை, 2ஆம் இடம் வி.லிந்தா கற்சிலைமடு அத.க.பாடசாலை, 3ஆம் இடம், அ.அகிலா மாங்குளம் ம.வி.

இரண்டாம் பிரிவில் கவிதைப் போட்டியில் 1ஆம் இடம் தெ.ஜனனி ஒட்டுசுட்டான் ம.வி.,2ஆம் இடம் சு.பவித்திரா ஒட்டுசுட்டான் ம.வி.,3 ஆம் இடம் தே.சுவிகரன் மாங்குளம் மகாவித்தியாலயம்.

மூன்றாம் பிரிவில் கட்டுரைப் போட்டி 1ஆம் இடம் ஸ்ரீ.சுரேகா ஒட்டுசுட்டான் ம.வி.,2ஆம் இடம் யோ.இரவீந்திரன் முத்துஐயன் கட்டு வ.க.அ.த.க.பாடசாலை,3ஆம் இடம் சி.இராசகுமார். ஒட்டுசுட்டான் ம.வி மூன்றாம் பிரிவில் கவிதைப் போட்டி 1ஆம் இடம் த.தஜிபா ஒட்டுசுட்டான் ம.வி.,2ஆம் இடம் ம.வனிதாராணி கற்சிலை மடு அ.த.க. பாடசாலை,3ஆம் இடம் க.மேகலோஜினி கற்சிலைமடு அ.த.க.பாடசாலை ஆகிய மாணவர்கள் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

# வவுனியா இந்து பரிபாலனசபை விடுதலைப் புலிகள் சந்திப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட இந்து பரிபாலன சபை பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று கடந்த திங்கள் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடை பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், நகரப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டதாக தெரியவருகிறது.(10)

# அமைச்சர் வவு. வருகை

(வவுனியா செய்தியாளர்)

சுதேச மருத்துவத்துறை அமைச்சர் திஸ்ஸகரலியத்த கடந்த திங்கள் வவுனியாவிற்கு வருகை தந்தார். வவுனியாவில் சுதேச மருத்துவத்துறையை விருத்தி செய்யும் நோக்குடன் வருகை தந்த இவர் மாமடு,மடுக்கந்த பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார். இதன் போது சுதேச மருத்துவத்துறையை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய இவர் அரசியல் விடயங்கள் தொடர்பாக எதனையும் பேசவில்லை. அத்துடன் இவர் பொதுசன ஐக்கிய முன்னணி கட்சிப் பிரமுகர்களுட னும் ஆலோசனை நடத்தியுள்ளார். (10)

# மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க திருமலையிலும் ஏற்பாடு

(திருமலை)

திருகோணமலையில் மாவீரர் தினத்தை வெகு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் கழகங்களுக்கு இடையே உதைபந்தாட்டம், கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகளை திருகோணமலை நகரிலும், மூதூர், பகுதியினருக்கான வலைப்பந்தாட்டம் மென்பந்து கிரிக்கெட், கரப்பந்தாட்டப் போட்டிகளை சம்பூரிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

# நிவாரணம்

(மன்னார்)

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வங்காலை கிராமத்தில் கரையோரங்களில் வசித்து வரும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதையடுத்து அப் பகுதியிலுள்ள 300 குடும்பங்களுக்கு தலா 300 ரூபா பெறுமதியுள்ள அரிசி, சீனி, மாவு, பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன."சோஆ" நிறுவனத்தினர் இதனை வழங்கியுள்ளனர். (மி)

# தணிக்கை செய்யப்படாத படச்சுருள்கள் கைப்பற்றப்பட்டன

## பாண்டியன் குளத்தில் காவல்துறை நடவடிக்கை

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தில் திருட்டுத்தனமாக தணிக்கை செய்யப்படாத சினிமா படங்கள் காட்சிப்படுத் துவதாக கிடைத்த தகவலையடுத்து துணுக்காய் காவல்பணிமனையினரால் நேற்று முன்தினம் மேற்படி பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பின் போது 2.00 மணியளவில் மூன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் இருந்து தணிக்கை செய்யப்படாத 9 படச்சுருள்களும் 8 பட தகடுகளும் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (24)

## விழிப்புணர்வுநடவடிக்கை

மன்னாரில் திருமறைக்கலா மன்றம் சமாதானத்தை முன்னெடுக்கும் நோக்கில் பள்ளிமுனை ஆலய முன்றலில் சமூக நாடகமொன்றை காண்பித்து சமாதான முன்னெடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.இதனை திருமறைக்கலா மன்றத்தின் இணைப்பாளர் அவர்கள் நெறிப்படுத்தியுள்ளார். (மி)

# தீவுப்பகுதிக்கான தரைவழிப்பாதை விரைவில் துண்டிக்கப்படலாம்!

யாழ்.குடா நாட்டிலிருந்து தீவுப் பகுதிக்கான தரை வழிப்பாதை எவ்வேளையிலும் துண்டிக்கப்படலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் அண்மைக் காலமாகப் பெய்து வரும் அடை மழையினாலும், நீண்டகாலமாகத் திருத்தப்படாமையினாலும் இவ் வீதி பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. சேதமடைந்துள்ள இவ் வீதி பண்ணைக்கடலினால் அரிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் பண்ணை முதல் அல்லைப்பிட்டி வரையிலான கடற்பரப்பில் வீதியின் சில பாகங்கள் எதிர்வரும் நாட்களில் முற்றாக இல்லாதுபோய் விடலாமென அப்பகுதி மக்கள் அச்சம்கொண்டுள்ள நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் நேற்று முன்தினம் இவ்வீதியினை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். அத்துடன் தீவுப்பகுதி மக்களையும் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (27)

# மாவீரர் நாள் நிகழ்வையொட்டி விசேட கலந்துரையாடல்கள்

(கரவெட்டி)

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல்களை கரவெட்டிப் பிரதேச செயலக அரசியல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். இக் கலந்துரையாடலானது மாவீரர் நாளை மிகவும் சிறப்பான முறையில் இட்டுச் செல்ல சிரமதானப் பணிகள், வீதிகள் தோறும் அலங்கார வேலைகள், இல்லங்கள் தோறும் மாவீரரின் பொதுப்படம் வைத்து தீபம் ஏற்றுதல், பொது இடங்களில் மாவீரர் நினைவுப் பந்தல் அமைத்தல், பதாகைகள் கட்டுதல் போன்றன மிகவும் திட்டமிடலோடு பெரும் எழுச்சிகரமாக முன்னெடுக்கவே பொது அமைப்புக்கள், கூட்டுறவுச்சங்கங்கள்,அரச உத்தியோகத்தர்கள், வர்த்தக நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் போன்றன நிர்வாக ரீதியாகக்கூடி கலந்துரையாடி வருகின்றன. இவ் விசேட கலந்துரையாடல்கள் கரவெட்டிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர். இ.தயா தலைமையில் தூயவன் அரசியல் பயிற்சிக் கல்லூரி அதிபர் சு.அரசண்ணா, தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த அருள் மாஸ்ரர், போராளிகளும் கலந்து சிறப்புரைகளையும் நிகழ்த்தி வருகின்றனர். இவ்விசேட கலந்துரையாடல்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறும். (கா)

# மட்டுவில் பாடசாலைக்கு அருகில் உள்ள பாலத்திற்கு அடியில் பதுங்கி இருந்த முதலை பிடிக்கப்பட்டது

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகே செல்லும் பாலத்திற்கு அடியில் பதுங்கி இருந்த இராட்சத முதலை ஒன்று நேற்றுக் காலை 7மணியளவில் இப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்டது இப்பகுதியில் உள்ள குளம் ஒன்றில் இருந்து சில நாட்களுக்கு முன்னர் வெளியேறிய



(படம்:- ஆன்சலின்)

முதலை பாடசாலைக்கு அருகே இருந்த ஓடைக்குள் பதுங்கி இருந்த சமயம் தற்செயலாக இப்பகுதியூடாகச் சென்ற ஒருவர் இதைப்பார்த்ததும் உடனே இப்பகுதியில் கூடிய இளைஞர்களால் இந்த முதலை பிடிக்கப்பட்டது. ஆறுஅடி நீளம் உள்ள இந்த முதலை தென்மராட்சியில் பிடிபட்ட பெரிய முதலை என தெரிவிக்கப்படுகிறது. (28)

# தென்மராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் அபாயம்

தென்மராட்சிப்பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் டெங்கு காய்ச்சல் இப்பிரதேசத்தில் பரவி வருவதாக சுகாதாரப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது டெங்கு காய்ச்சல் தாவாளை, இயற்றாலை பகுதியில் பரவி வருவதாகவும். இதனால் பலர் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் மற்றும் சில பகுதிகளில் இந்த நோய்களுக்கான அறிகுறி தெரிய வருவதாகவும், இது குறித்து விழிப்புடன் இருந்து நுளம்புக்கடியை தவிர்ப்பதற்கு நுளம்பு வலைகளைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். (28)

-கரவெட்டி தெற்கு மேற்கு பி.செ.பிரிவில்-

# இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு உணவல்லாத பொருட்கள் விநியோகம்

(கரவெட்டி)

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு தெரிவு நிலையடிப்படையில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நேற்று முன்தினம் தொடக்கம் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் உணவல்லாத பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் விவசாயகுடும்பங்களுக்கு தலா ஒரு மண்வெட்டி, ஒரு கல்வனைஸ்வாளி, ஒருஅலுமேனியக குடம், அலவாங்கு ஒன்று,தறப்பாள் ஒன்று, பிளாஸ்ரிக் பாய் இரண்டு, நுளம்பு வலை ஒன்று, கத்தி ஒன்று, நைலோன்கயிறு 100 மீற்றர், உணவுப்பாத்திரம் பொதி செய்யப்பட்ட பெட்டி ஒன்று வீதம் 450 குடும்பங்களுக்கும், விவசாயம் செய்யாத குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் அல்லாத மேற்குறிப்பிட்ட ஏனைய பொருட்கள் 700 குடும்பத்தினருக்கும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலக வளாகத்தில்வைத்து விநியோகிக்கப்பட்டு வருகிறது எதிர் வரும் 2004.11.24 ஆம் திகதி வரை விநியோகம் இடம் பெறும் என கரவெட்டி தெற்குமேற்கு பிரதேச செயலர் எ.எம்.ஜோசெப் தெரிவித்துள்ளார். (கா)

# பாராளுமன்றத்திற்குத் தெரிவான பரியோவான் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கௌரவித்து, பாராட்டும் நிகழ்வு திங்கள் நடைபெற்றது.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு பழைய மாணவர் சங்க உபதலைவர் என்.குகதாசன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் ஆசியுரையினை கல்லூரியின் பழைய மாணவர் அருட் தந்தை எம்.ரி ஞானபொன்ராஜா நிகழ்த்தினார். அடுத்து கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட ஈழவேந்தன், சிவநாதன் கிஷோர், ரவிராஜ் ஆகியோரை பழைய மாணவர் சங்க உபதலைவர் என்.குகதாசன் அறிமுகம்செய்து வைத்தார். தொடர்ந்து பாராளுமன்ற உறுப் பினர்களைப் பாராட்டி வாழ்த்துப் பாடப்பட்டு, வாழ்த்து மடல்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டன. நன்றியுரையினை கல்லூரி அதிபர் தனபாலன் நிகழத்தினார். (10)

# பலாலி விமானத்தளத்தை நிர்மாணிக்க முன்வரின் தமிழ் மக்களின் நம்பிக்கையை இந்தியா இழக்கும்

## யாழ். இடம்பெயர்ந்தோரின் அமைப்பு தெரிவிப்பு

இலங்கை அரசினால் முற்றாக இராணுவ நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்படுகின்ற பலாலி விமானத்தளத்தை நிர்மாணித்து வழங்க இந்திய அரசு முன்வருவதன் மூலம் அது தமிழ் மக்களிடையே உள்ள நம்பிக்கையினை முற்றாக இழந்து வருவதாக யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

பலாலி விமானத்தளத்தை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பான ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசும் இந்திய அரசும் கைச்சாத்திடவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே இக்குற்றச்சாட்டை அவ்வமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையினில் மேலும் தெரிவிக்கப்படுகையில் முன்னர் இராணுவ தேவைகளிற்காக பலாலிவிமானத் தளம் விஸ்தரிக்கப்பட்டது. அதற்காக தமிழ் மக்களது காணிகள் பலவந்தமாகப் பறிக்கப்பட்டன.

பின்னர் இவ்விமானத் தளத்தை யண்டிய பகுதிகளில் படை முகாம்கள் பலவும் நிறுவப்பட்டதுடன் உயர்பாதுகாப்பு வலயமெனக் கூறி பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆயினும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக வெளியேற்றப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கடந்த 15 வருடங்களிற்கு மேலாக முகாம்களில் தொடர்ந்தும் முடங்கிப்போயுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயமென்பது சட்டரீதியாக செயலற்றுப் போயுள்ளதுடன் இவ்விடயம் தொடர்பில் மனித உரிமைகள் என்பது குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக கடந்தகாலங்களில் எம்மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட காரணமான குண்டு வீச்சு விமானங்கள் இத்தளத்திலே தரித்து நின்றே குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்தன.

இதேவேளை இந்தியாவைத் தமது நீண்ட கால நெருங்கிய உறவாகத் தமிழ் மக்கள் நம்பிவருகின்றனர். ஆனால் தற்போது பலாலி விமானத்தளத்தை நிர்மாணிப்பதற்கான நிதிஉதவியினையும் வளங்களையும், வழங்க இந்தியா முன்வந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகிய வண்ணமுள்ளன.

தொடர்ந்தும் இராணுவப் பயன்பாட்டிற்கே இலங்கை அரசினால் பயன்படுத்தப்போகும் பலாலி விமானத் தளத்தை மீள் நிர்மாணிக்க உதவுவதன் மூலம் தமிழ் மக்களது நட்பை இந்திய அரசு இழந்து விடப்போகின்றது. என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

# விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட இரு கைதிகள் தப்பி ஓட்டம்

## -பருத்தித்துறையில் சம்பவம்

விசாரணைகளிற்கென பருத்தித்துறை நீதிமன்றிற்கு அழைத்துவரப்பட்ட கைதிகள் இருவர் தப்பித்துச்சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

விசாரணைகள் முடிவுற்ற தையடுத்து மீண்டும் யாழ். சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல ஏதுவாக நீதிமன்ற கட்டடத்திலிருந்து,சிறைச்சாலை வாகனத்தை நோக்கி அழைத்துச்செல்ல முற்பட்ட வேளையிலேயே அவர்களிருவரும் தப்பித்துள்ளனர்.

இதேவேளை கைதிகள் இருவரும் தப்பித்தவேளை கைகளில் விலங்கிடப் பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

வடமராட்சியின் கப்புதூ பகுதியில ஐரோப்பிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியிருந்த குடும்பங்களிடையே பெருமளவு உடமைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டின் பேரில் நெல்லியடிப் பொலிசாரால் இவர்கள் முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட வேளையினில் இவர்கள் மீது வேறு பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன..

இதனிடையே கைதிகள் இருவர் தப்பித்துச் சென்ற சம்பவத்தை அடுத்து நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள பிரதான வீதிகள் அனைத்தும் வழிமறிக்கப்பட்டு பொலிசாரால் தேடுதல்கள் நடாத்தப்பட்டிருந்தன. குறிப்பாக வீதியூடாகப் பயணித்த பொதுமக்களும் இச்சோதனை நடவடிக்கைகளிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். (22)

# விபத்தில் தொடர்புடைய இராணுவச் சாரதிக்கு தொடர்ந்து விளக்கமறியல்

கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தின் போது குறிப்பிட்ட இராணுவ பௌசர் வாகனத்தைச் செலுத்தி வந்த இராணுவச் சாரதியை 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே சம்ப வதினமன்று இரவு பதில் நீதவான் வாசஸ்தலத்தில் ஆஜர்செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அச் சாரதி விசாரணைகளிற்காக மீண்டும் நேற்று சாவகச்சேரி நீதவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரை தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைப்பதற்கான உத்தரவை நீதவான் பா.சுப்பிரமணியம் நேற்றுப் பிறப்பித்துள்ளார். (27)

# தொடர் மழை காரணமாக யாழ்.இல் மரக்கறி பயிர்கள் அழிவு

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள தோட்டக் காணிகளின் மரக்கறிப் பயிர் வகைகள் அழிந்துள்ளன.

அச்சுவேலி, நிலாவரை, புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உரும்புராய் மற்றும் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசங்கள் உட்பட தெல்லிப்பழை,மல்லாகம் பகுதிகளிலேயே இப் பயிரழிவுகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. கரட், கோவா, கத்தரி, கரனைக் கிழங்கு, மரவள்ளி உட்பட மற்றும் சில வகையான பயிர்களும் அழிந்து போயுள்ளன.

இத் தொடர் மழையினால் பல ஆயிரக்கணக்கான ரூபாக்களை முதலீடு செய்து பயிர்களை செய்கை பண்ணியவர்கள் நட்டத்தை அனுபவிக்கும் நிலமை ஏற்பட்டுள்ளதென விவசாய அமைப்புக்கள் கூறுகின்றன. (41)

# சிறிலங்காவின் வரவு-செலவுத்திட்டமும் அரசியல்வாதிகளும்

இன்று நடைபெறும் வரவு செலவுத் திட்ட யோசனை சமர்ப்பிப்பை மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பர் என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் யோசனைகளில் தெரிவிக்கப்படும் மக்களுக்கான சலுகைகளும், உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படலாம். அல்லது தட்டிக்கழிக்கப்படலாம். வரவு செலவுத் திட்டம் என்பது அடுத்து வரும் வருடத்திற்கான நிதி ஒதுக்கீட்டு திட்டமிடலாகும். இந்தத் திட்டமிடல்களும் இடைநடுவில் மாற்றப்படலாம். ஆயினும் ஒரு அரசாங்கம் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டவரையறைக்குள் முடியுமானவரை நிர்வாகம் செய்து வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். எனினும் மக்களின் எதிர்பார்ப்பு வாக்குறுதிகளாகவரினும் அதனை நிறைவேற்றும் உத்தரவாதம் கிடையாது. இதன் மூலம் வருட ஆரம்பத்தில் காணப்படும் திட்டமிடல் இறுதியில் இல்லாது போய்விடுவதை நாம் நீண்ட காலம் கவனித்துள்ளோம்.

2004 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நோக்கும் போது அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகள் மறைந்துவிட்டன. அத்துடன் திறைசேரி அண்மையில் தெரிவித்தபடி வருட ஆரம்பத்தில் இருந்த 6.8 வீத பற்றாக்குறை தற்போது 8 வீதமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் 2005 ஆம் ஆண்டுக்கான துண்டுவிழும் தொகை 9 வீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தால் பெரிதும் நன்மைகள் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதியமைச்சரின் குற்றச்சாட்டு கூற்றுப்படி இந்த முறை வரவு செலவுத் திட்ட யோசனைகளை தயாரித்தது திறைசேரிச் செயலர் ஜயசுந்தர அன்றி அவரது குருவும் அமெரிக்க பொருளியல் நிபுணருமான கஸ்பெப்னிக் என்பவராவர் இக்குற்றச்சாட்டு எவ்வளவு தூரம் உண்மை என்பதை வேறு சிலரின் கூற்றுக்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் அரசாங்கம் இதனை மறுக்கின்றது. இது தொடர்பாக திறைசேரியின் திட்டமிடல் பணிப்பாளர் கூறுகையில், இக்குற்றச்சாட்டு முற்றிலும் தவறு எனத் தெரிவித்துள்ளதுடன் அமெரிக்கப் பொருளியல் நிபுணர் பெப்னிக் இவ் வரவு-செலவுத் திட்டத்தில் எதுவித தொடர்பும் வைத்திருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். ஆயினும் பந்துல குணவர்த்தன மேலும் ஒருபடி சென்று பெப்னிக்கிற்கு இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆலோசனை தெரிவித்த வகையில் அவருக்கு பெருந்தொகைப் பணம் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆயினும் அமெரிக்க நிபுணர் பெப்னிக் இங்குவந்தது அமெரிக்கா உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் அமெரிக்கா வழங்கும் இந்நிதியை பயன்படுத்தும் திட்டங்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கவே என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

அதற்கான கொடுப்பனவாக ஒரு தொகை அமெரிக்க டொலரையும் அமெரிக்காவே வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்கும் போது இவ்வரவு செலவுத்திட்டம் பற்றி நிதியமைச்சின் செயலர் ஜயசுந்தரவிடம் பத்திரிகையாளர் வினாவிய போது கிராம அபிவிருத்தி சிறுகைத்தொழில் கிராமிய தொழில் வாய்ப்பு, கிராமிய உட்கட்டமைப்பை விருத்தி செய்தல் முதலானவற்றுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவிரும்புவதாகவும் கல்வி, சுகாதாரம், திறனாய்வுகளில் மிகக்கவனம் செலுத்துவதாகவும் பாதுகாப்புக்கு தேசிய உற்பத்தியில் ஒரு வீதத்தை ஒதுக்குதல் என்பவையே இவ்வரவு செலவுத்திட்ட யோசனைகளின் முக்கிய குறிக்கோள் என்று கூறியுள்ளார்.

அத்துடன் இடைக்கால அபிவிருத்திக்கென 3 வருட காலத்தை அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதென்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் துண்டு விழும் தொகையை 7.5 வீதமாகக் குறைக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறார். திட்டமிடப்பட்டுள்ள 3 வருட காலத்திற்கான துண்டுவிழும் தொகை 5 சதவீதமாகக் குறையும் வகையில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் 2005 இற்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளை சாதகமாக்கிக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் ஜனதா விமுக்தி பெரமுனை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அரசின் ஆதரவாளர்களும் மக்கள் அமைப்புக்கள் சிலவும் இம்முறை வரவு செலவுத்திட்ட யோசனைகளில் சேர்த்துக்கொள்ளவென சில ஆலோசனைகளை நிதித்திட்டமிடல் அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளன. வரலாற்றில் நடைபெறாத ஒன்று இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் நிகழப்போகின்றது.

அதாவது கடந்த 29.10.2004 இல் அகில இலங்கை தொழிற்சங்கச் சம்மேளனம் உள்நாட்டு நிறுவனங்களின் கூட்டுறவு சேவைச்சங்கம் ஆகியன சரத் அமுனுகமவைச் சந்தித்துப் பேச்சுநடத்தியுள்ளன. இதன் போது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள அதிகரிப்பைப் போன்று தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் எனக்கோரியுள்ளது. அத்துடன் புதிய வரிகள் எதனையும் அறவிடாது தற்போது நடைமுறையிலுள்ள வரிமுறைகளையே பின்பற்றுமாறும் கோரப்பட்டது. ஆனால் பெறுமதி சேர்வரியில் சிறு மாற்றம் செய்யப்படவிருப்பினும் அதனை மேலும் பலப்படுத்தும் திட்டத்தை அரசு கொண்டு ...யறவிடலில் புதிய கொள்கையை கடைப்பிடித்து வருமானம் பெற அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தேசிய வருமானத்தில் 18 சதவீதம் கிடைக்கும் என அரசு கருதுகின்றது. இத்திட்டத்தை வருடாந்தம் உயர்த்துவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

**மொழியாக்கம்:- வடிவேல்**

அதேவேளை மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கையில் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைக்கவும் நிவாரணங்கள் வழங்கவும் இணங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இப்பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வரவு செலவுத்திட்ட யோசனைகள் மூலம் அதிக நன்மைகள் கிடைக்கும் என்பது வருட ஆரம்பத்தில் நடைமுறையில் இருக்கும் திட்டம் இறுதியிலும் இருக்கும் என்ற உத்தரவாதத்திலேயே தங்கியிருக்கின்றது.

# மருந்துக்கலவையாளரின் பற்றாக்குறையை நீக்க ஆயிரம் பேருக்கு விரைவில் பயிற்சி

(கொழும்பு)

இலங்கையில் மருந்துக் கலவையாளர்களின் பற்றாக்குறையை நீக்க விரைவில்1000 பேர் அரச செலவில் பயிற்றுவிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். பொது மருந்தகங்களில் நோயாளர்களுக்கு தவறாக மருந்துகள் வழங்கப்படுவது குறித்து தற்போது கவனம் செலுத்துவதாகவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைப் பரிசோதகர்கள் தொடர்பான தனது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. இந்தப் பரிசோதகர்களுக்கு அலகு அடிப்படையில் வழங்கப்பட்ட கொடுப்பனவு முறை மாற்றப்பட்டு நேர அட்டவணைப்படியான வேலை முறைமை ஏற்படுத்தியது நியாயமே எனத் தெரிவித்த அவர், இவர்களின் அலகுமுறைப் பரிசோதனையில் தரம் பற்றிய சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவித்துள்ளார். பகலில் 40 பரிசோதனைகளை மட்டுமே செய்யும் பரிசோதகர்கள் இரவில் மட்டும் 400 பரிசோதனைகளைச் செய்வது கேள்விக்குரிய விடயம் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை கொழும்பு வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் சுகயீன விடுப்பில் இருப்பதனால் குறித்த துறையில் மருத்துவ சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தியையும் மறுத்த அவர் ஒரு வைத்தியரூடாக சேவை தொடர்வதாகவும் தெரிவித்தார். அத்துடன் கதிரியக்கப் பிரிவில் பணியாற்றிய இரு வைத்தியர்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டமைக்குக் காரணம் கதிரியக்கச் செயற்பாடே என்ற செய்தியையும் மறுத்தஅவர். அது தொடர்பான முழுமையான ஆய்வு நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார். (32)

## அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

(வவுனியா செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் சிரமதானத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழீழ மாவீரர் நாளை வவுனியா மாவட்டத்தில் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. இதேவேளை, ஈச்சங்குளத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கான விசேட ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிக்க பொது மக்களும் தம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றனர். வவுனியா மாவட்ட அரச திணைக்கள உத்தியோகத்தர்களும், வவுனியா மாவட்ட கல்விச் சமூகத்தினரும் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானத்தினை மேற்கொண்டுள்ளனர் (10)

## அரச வைத்தியசாலை ஆய்வு கூட ஊழியர் போராட்டத்தை முனைப்புப்படுத்த முடிவு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளின் இரசாயன ஆய்வு கூட ஊழியர்கள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முனைப்புப்படுத்தவுள்ளதாக எச்சரித்துள்ளனர்.

அரசாங்க ஆய்வுகூட தொழில் நுட்ப ஊழியர்கள் சங்க நடவடிக்கைக் குழுச்செயலர் கருத்து வெளியிடுகையில்,

இடைநிறுத்தப்பட்ட மேலதிக வேலைநேரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதாகவும் தெரிவித்த அவர், தமது துறையை தனியார் மயப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை நாம் எதிர்ப்பதாகவும் அமைச்சர் எமது கோரிக்கைகளை மூடிமறைக்க முயல்கின்றார். இந்த நிலையில் தாங்கள் பாரிய போராட்டத்தை நடத்துவதற்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சட்டவிரோத ஆயுத ஒப்படைப்பு; அரசாங்கம் கால அவகாசம் நீடிப்பு

இலங்கையில் சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்கான பொதுமன்னிப்புக் காலம் எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சட்டம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கு பொதுமன்னிப்பும் சன்மானமும் வழங்கப்படுமென அறிவித்து எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஏற்கனவே கால அவகாசம் வழங்கியிருந்தது.

ஏற்கனவே இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டு ஒன்றரை மாதங்கள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை 1,337 ஆயுதங்கள் தான் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. அமைச்சின் தகவலின்படி ரூபா 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பாக அமைச்சு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விடுத்துள்ள அறிவித்தலில், ஆயுதங்களை ஒப்படைப்பவர்களிடம் எப்படிக்கிடைத்தது உட்பட எந்தவித கேள்விகளும் கேட்க வேண்டாம் என்றும், ரி-56 ரக துப்பாக்கி ஒன்றிற்கு ரூபா 50 ஆயிரம், கைத்துப்பாக்கியொன்றுக்கு ரூபா15 ஆயிரம், துப்பாக்கி ரவை ஒன்றிற்கு - 500 ரூபா என சன்மானத்தை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

## ஊர்திப்பதிவு உரிமைமாற்றம் செய்வோர் கவனத்திற்கொள்க

(அலுவலகச்செய்தியாளர்)

ஊர்திகளை, பதிவு உரிமைமாற்றம் செய்யும்போது அண்மையில் எடுக்கப்பட்ட பழைய கடவுச்சீட்டுக்கு அமைந்ததான (02x02½ சென்ரிமீற்றர்) நேர் நின்ற வீதிக்கு அமைவாக எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் 02(இரண்டு) சமர்ப்பித்து ஊர்திகளை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப்பகுதி போக்குவரத்துக்கண்காணிப்புப்பிரிவினர் கேட்டுள்ளனர். (சோ)

# கல்வித்துறையை தனியார் மயமாக்க ஒருபோதும் நான் அனுமதிக்கேன்

### சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

**கல்வித்துறையை ஒருபோதும் தனியார் மயப்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டேன் என சனாதிபதி உறுதியளித்துள்ளார். அதனைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றப்போவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். தனியார் துறையின் உதவியுடன் குறைந்த வசதிகளைக்கொண்ட பாடசாலைகளைத் துரிதமாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசு மேற்கொண்ட விசேட திட்டத்தின் முதற் கட்டத்தை ஆரம்பித்து வைத்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

இதேவேளை கல்வித்துறையை தனியார் மயப்படுத்துவதாக இருந்தால் அதற்கு எதிராக முதலில் நான்தான் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்குக் கணிசமான அளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென சனாதிபதி தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட யோசனைகள் ஊடாக 10இலட்சம் அரச ஊழியர்களும், அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நன்மை பெறுவார்களென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதுபோன்று தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென நான் நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாகக் கடந்த தேர்தலின் போது அரச ஊழியர்களுக்கு 70சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் என சந்திரிகா வாக்குறுதி வழங்கப்பட்டமை தெரிந்ததே. அரசின வரவு-செலவுத்திட்ம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரிசூதிய சீட்டிழுப்பு தனியாரிடம் விற்பனையாளர் போராட்டம்

பரிசூதிய சீட்டுக்களின் உரிமையை வெளி நாடுகளுக்கு விற்பதை எதிர்த்து பரிசூதிய சீட்டு விற்பனையில் ஈடுபடுவோர் அடையாளப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். பரிசூதிய சீட்டிழுப்பு விற்பனையாளர்களின் சங்கத் தலைவர் எச்.எம் ஹேரத் வரலாற்றில் முதல் முறையாக அரசாங்கம் பரிசூதிய சீட்டுக் களின் உரிமையை தனியாருக்கு ஒப்படைக்கவுள்ளது நோர்வேயின் நோர்டி.பி.ஏ என்ற நிறுவனமும், அமெரிக்காவின் சிடெக்ஸ் என்ற நிறுவனமும் இலங்கையில் பரிசூதிய சீட்டு விற்பனையில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இதனை எதிர்த்தே நாடு முழுவதிலும் உள்ள பரிசூதியச் சீட்டு விற்பனையாளர்கள் எதிர் வரும் 27 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்' அத்துடன் அன்றைய தினம் கோட்டை தொடரூந்து மையத்தில் இருந்து பேரணி நடத்தப்பட்டு பிரதமரிடம் கோரிக்கை மனு கையளிக்கப்படவுள்ளது.

இக்கோரிக்கை செவிமடுக்கப் படாது போனால் போராட்டம் விரிவாக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவித்துள்ளனர். பலதுறைகளைத் தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுகின்றமை தெரிந்ததே. (32)

# பெற்றோல் விலை உலக சந்தையில் வீழ்ந்த போதும் இலங்கையில் குறையாதாம்!

### -பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்த போதிலும் பாவனையாளர்களுக்கு எரிபொருளின் விலையைச் குறைக்க முடியாத நிலையில் உள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே நான்கு ரூபா ஐம்பதுசதம் நட்டத்திலேயே பெற்றோலை வழங்கி வருவதாகத் தெரிவித்த அவர், உலகசந்தையில் மசகு எண்ணெய்யின் விலை இரண்டு மாதத்திற்கு முன்பிருந்த விலைக்கு மீண்டும் வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை உலக சந்தையில் திங்கட்கிழமை மசகு எண்ணெய்யின் விலை மீண்டும் குறைந்துள்ளதாகவும், பீப்பாய் ஒன்று 45.4 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவித்த அவர் கடந்த மாதம் மசகுஎண்ணெய் பீப்பாய் ஒன்று 55.7 அமெரிக்க டொலராக இருந்ததாகவும் கூறினார். ஆனால் இன்னும் எண்ணெய்யின் விலையைக் குறைக்கும் சந்தர்ப்பம் ஏற்படவில்லையென அவர் கூறியுள்ளார்

# குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன அரசாங்கம் மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நாடு முழுவதும் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார். சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை கடந்த நவம்பர் மாதம் பொறுப்பேற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் குற்றப்புலனாய்வுத்துறை வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் இந்த ஆண்டில் ஏப்ரல் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் மாத்திரம் கொலை, ஆட்கடத்தல், தீவைப்பு ஆகியன உட்பட பாரிய காயங்களை உண்டாக்குதல், பாலியல்வல்லுறவு உட்பட இருபத்தெட்டாயிரத்து பதினேழு குற்றச் செயல்கள் பதிவாகி உள்ளதாக அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே இதனைக் கூறிய அவர், இது பெரும் சாதனை எனவும் குறிப்பிட்டார்.

# இலஞ்ச ஊழலுக்கெதிரான ஆணைக்குழுவிற்கு புதிய ஆணையாளரை நியமிக்க ஏற்பாடு

(கொழும்பு)

இலஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவிற்கு புதிய ஆணையாளர்களை நியமிக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்காக எதிர்வரும் 22 ஆம் திகதி அரசியலமைப்பு சபை கூடவுள்ளது

தற்சமயம் இலஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவில் அங்கம் பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் 14 ஆம் திகதியுடன் முடிவடைகிறது இந்த நிலையில் புதியவர்கள் மூவர் எதிர்வரும் 22 ஆம் திகதி நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. இதேவேளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவோரில் இருவர் இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர்களாவோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாகவோ இருக்க வேண்டும் என்பது நியதியாகும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவானது உயர் நீதிமன்றத்துக்கு ஈடான அதிகாரத்தை கொண்டிருப்பதன் காரணமாகவே அதற்கு இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்படுகின்றனர். (32)

# புத்தரின் தலை பொறித்த பொருட்கள் விற்கத் தடை

### உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

புத்த பகவானின் தலை பொறிக்கப்பட்ட பொருட்களை இலங்கையில் விற்பனை செய்வதை தடுக்கவேண்டும் எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த மனுவை பௌத்த பிக்கு ஒருவர் தாக்கல் செய்திருந்தார். இதனை திங்கட்கிழமை பிரதம நீதியரசர் சரத்என்.சில்வா தலைமையிலான நீதியரசர்கள் விசாரணை செய்த போது, மனுவின் பிரதிவாதிகளான பொலிஸ் மா அதிபர், வெளிநாட்டமைச்சர் மற்றும் சுங்கப்பணிப்பாளர் ஆகியோர் இதனை தடுப்பதற்கு உரிய நடவ டிக்கைகளை எடுப்பதாக தெரிவித்தனர். இந்த நிலையிலேயே நீதிய ரசர் குழு மனுவின் தீர்ப்பை ஒத்திவைத்தது. (32)

# வீதிகளின் தன்மைக்கேற்ப வாகனப் போக்குவரத்து

### –போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வீதிகளின் நன்மைகருதி பாதைகளின் தன்மையைப் பொறுத்து பாரம் கூடிய வாகனங்களின் போக்குவரத்தைத் தடுக்கும் உத்தரவை போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதற்காக எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது. இதன்படி 8 சில்லுகளைக் கொண்ட 36 தொன் நிறையைக் கொண்ட வாகனங்களும் 41 தொன் நிறையைக் கொண்ட எட்டு சில்லுகளுடன் கூடிய வாகனங்களும் பாதையின் தன்மையைப் பொறுத்து போக்குவரத்துச் செய்யமுடியாது என உத்தர விடப்பட்டுள்ளது.

# விசேட அதிரடிப்படையின் நடவடிக்கை அம்பாறை மாவட்டத்தில் அதிகரிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப்படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், அம்பாறை ஆகிய நகரங்களில் விசேட காவல் கடமையில் அதிரடிப்படையினர் ஈடுபட்டுவருவதுடன் சந்தேகத்திற்கிடமான வாகனங்களையும் சோதனை செய்கின்றனர்.

அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படைமுகாமிற்கு அருகில் சோதனைச்சாவடி ஏற்படுத்தப்பட்டு, வாகனங்கள் மறிக்கப்பட்டு, பிரயாணிகளைக் கீழே இறக்கி அவர்களது பொதிகள் சோதனைக்குள்ளாக்கப்படுவதுடன் உந்துருளிகளில் செல்வோரும் கடும் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

கல்முனை- அம்பாறை வீதியில் சம்மாந்துறை வீர முனைச் சந்தி, வங்களாவடி, வளத்தாபிட்டி, புதியவளத்தாப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் விசேட அதிரடிப் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு காவல்கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை நகருக்கு நுழையும் பிரதான வீதிகளில் திடீர் சோதனைச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் சோதனையிடப்படுவதுடன் வாகனங்களில் பிரயாணம் செய்யும் நபர்களின் பெயர் விபரங்கள் விசாரிக்கப்படுகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அண்மைக்காலங்களில் இம் மாவட்டத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்தே இச் சோதனை நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

# இலவசக்கல்வியை இரத்துச் செய்யும் அரசின் திட்டம் குறித்து கண்டனம்

### அனைத்துப் பல்கலை மாணவர் சம்மேளனம் அறிக்கை

அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகளை தனியார் துறையிடம் ஒப்படைப்பது இலவச கல்வியை ரத்துச்செய்யும் திட்டத்தின் ஒரு கட்டமாகுமென அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் இந்தத் திட்டத்தை சனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இன்று 25 பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகள தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் மேலும் 2000 பாடசாலைகள் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளது. தற்போதைய அரசாங்கம் இந்தத் திட்டத்தை பலாத்காரமாக செயற்படுத்த முனைகிற என்றும் மாணவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# -மைக்ரோமேஜ் நிறுவனத்தால்- தமிழிலும், சிங்களத்திலும் எஸ்.எம்.எஸ் அனுப்புதல் அறிமுகம்

(கொழும்பு)

மைக்ரோமேஜ் என்ற மென்ரக தொழில்நுட்ப நிறுவனம் கையடக்க தொலைபேசியில் எஸ்.எம்.எஸ் இல் குறுகிய தகவல்களை தமிழ், சிங்கள மொழியில் அனுப்பும் தொழில்நுட்ப முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் கிராமிய மட்டத்தில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் தமக்குரிய குறுகிய தகவல்களை சிங்களம் மற்றும் தமிழில் பரிமாறிக் கொள்ளமுடியுமென மைக்ரோமேஜ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் ஆங்கிலத்தில் மாத்திரமே எஸ்.எம்.எஸ் இல் குறுகிய தகவலை அனுப்பும் முறை இருந்து வந்தமையால், கிராமிய மட்டத்தில் உள்ள தமிழ் மக்கள் இச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை எனும் குறையை மைக்ரோமேஜ் நிறுவனம் நிவர்த்தி செய்துள்ளது. (32)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை (மல்லாகம்)

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத் தொகுதிகள் என்பன

## 01-01-2005 தொடக்கம் 31-12-2005 வரை குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2005

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி - 2004-11-25ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 2004-11-30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி - 2004-12-01 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிவரை

ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப்பிணைப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்பத்திரப்பணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01) அளவெட்டி மலைவேம்படி சந்தை | – | 40250.00 | 1000/= | 150/= |
| 02) மல்லாகம் பொதுச் சந்தை | – | 10500.00 | 500/= | 150/= |
| 03) இறால்மடம் சந்தை | – | 550.00 | 500/= | 150/= |
| 04) மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 300/= | 55000.00 | 1000/= | 150/= |
| 05) அளவெட்டி கருவாட்டுக் கடை இல. 6 | 125/= | – | 500/= | 150/= |
| 06) அளவெட்டி கருவாட்டுக்கடை இல. 7 | 125/= | – | 500/= | 150/= |
| 07) மல்லாகம் சந்தை கருவாட்டுக்கடை | 300/= | 525 | 500/= | 150/= |
| 08) மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300/= | 1050.00 | 500/= | 150/= |
| 09) மல்லாகம் பொதுச்சந்தைக் கடைத் தொகுதிக் கடைகள் இல. 05 | 300/= | 25,000.00 | 1000/= | 150/= |
| 10) மல்லாகம் பொதுச்சந்தைக் கடைத் தொகுதிக் கடைகள் இல. 06 | 300/= | 25,000.00 | 1000/= | 150/= |
| 11) மல்லாகம் பொதுச்சந்தைக் கடைத் தொகுதிக் கடைகள் இல. 07 | 300/= | 25,000.00 | 1000/= | 150/= |
| 12) கும்பலை மாட்டிறைச்சிக் கடை | 150/= | 10,000.00 | 500/= | 150/= |
| **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | | |
| 01) கூத்தன்சீமாச் சந்தை | - | 475.00 | 500/= | 150/= |
| 02) கடைத் தொகுதி கடை இல. –1 | 100/= | - | 500/= | 150/= |
| 03) கடை இல. 2 | 100/= | - | 500/= | 150/= |

குறிப்பு:
- □ மாத வாடகைகள் யாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
- □ கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 15வீதமும் மேலதிமாகச் செலுத்தப்பட வேண்டும்.
- □ கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.
- □ இறைச்சிக்கடை விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2 ஆதனவரி அறிவித்தல் – 2005

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் மல்லாகம் உப அலுவலக எல்லைக்குள் தற்போது 1964ஆம் ஆண்டு ஆதனங்கள் மதிப்பீடு, ஆண்டு பெறுமதியின் 3 வீதம் வசூலிக்கப்படுகிறது. சபையின் நிர்வாக அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அதே மதிப்பீட்டின் 10 வீத தொகையை 2005ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை வரியிறுப்பாளர்கள் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### 3 படவரைஞராகப் பதிவு செய்தல்

2005ஆம் ஆண்டு படவரைஞராக இச்சபையில் தம்மைப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### 4 வியாபார உரிமம், அனுமதிப் பத்திரம் – 2005

எமது பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2005ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான உரிய படிவத்தினைச் சபையில் பெற்று, பூர்த்தி செய்து 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் மல்லாகம், மயிலிட்டி, தெல்லிப்பழை, காங்கேசன்துறை உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

### 5 வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 263 இன் பிரகாரமான அறிவித்தல்

வலி. வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எல்லைக்குள் சபையின் அனுமதியின்றி அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசல கூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் போன்ற வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத் தருகின்றேன். எனவே, கட்டப்பட வேண்டிய கட்டடங்களுக்கு மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை உப அலுவலகங்களில் விநியோகிக்கப்படும் கட்டட விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டும் என அறியத் தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடு வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### 6 வலிகாமம் வடக்கு பிரதேச சபை – காங்கேசன்துறை (மல்லாகம்) நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமைகளை உடையவர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01) பிரதேச சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02) க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு படங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
03) 18–45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
04) தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடையவர்கள் தங்கள் சுயவிபரத்துடன் கிராம சேவகரின் சான்றிதழைப் பெற்று 24–12–2004ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தெரிவு செய்யப்படும் மேற்படி பதவிக்கான உத்தியோகத்தர்கள் பிணைப்பணமாக ரூபா 5000/= செலுத்தல் வேண்டும்.

**செல்லையா செல்வரத்தினம்**
செயலாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)

வலி. வடக்குப் பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)
16-11-2004.

(சி-10620)

## போராட முஸ்தீபு

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து போராட்டம் ஒன்றில் ஈடுபட தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மருத்துவ பீட மாணவர் தெரிவிக்கையில்

பலவருடங்களாக தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உதாசீனம் செய்து வந்தமை தொடர்பிலேயே இப்போராட்ட முஸ்தீபில் தாம் ஈடுபட்டுள்ளதாக சுட்டிக்காட்டினர்.

## குழு அமைப்பு

பல்கலைக்கழக ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மென்டிஸ் மருத்துவ பீட மாணவர்களுக்கு பிரச்சினைகள் பல இருப்பது உண்மை எனத் தெரிவித்தார். அது குறித்து ஆராய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக வும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## நல்லெண்ண விஜயம்

(வவுனியா செய்தியாளர்)

சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு 70 தென் பகுதி சிங்கள இளைஞர்கள் வவுனியாவிற்கு வருகை தரவுள்ளனர்.சமாதான நல்லெண்ண நோக்கோடு வெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு வருகைதரும் இவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை வவுனியாவில் தங்கியிருப்பர். (10)

## ஒத்துழைப்பு கிடைக்கிறது

வடக்கு கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக விடுதலைப்புலிகளிடம் இருந்து பாரிய ஒத்துழைப்புக் கிடைப்பதாக அம்மாகாணத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## கனமழையால் பாதிப்பு!

(வவுனியா செய்தியாளர்)

கடந்த ஒருவாரகாலமாக வவுனியாவில் பெய்துவரும் தொடர் மழையினால் வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

பூந்தோட்டம், சிதம்பரபுரம், நெளுக்குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் இம்மழையினால் பாதிப்படைந்துள்ளனர். இம்மழையினால் இவர்களின் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் இப்பகுதிகளில் சுகாதார சீர்கேடுகளும் அதிகரித்துள்ளன. இதனால் இப்பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதுதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (10)

## விமானசேவைஅதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையும் சிங்கப்பூரும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு நாடுகளுக்கிடையிலான விமானசேவைகள் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளின் அரசாங்கங்கள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் செய்துகொண்ட சரக்கு விமான சேவை ஒப்பந்தத்திற்கு பக்கபலமாகப் புதிய ஒப்பந்தம் அமைகிறது. அதேபோன்று புதிய ஒப்பந்தத்திற்கமைய இரு நாடுகளின் விமானங்கள் அந்தந்த நாடுகளின் ஆகாயப பிரதேசத்தில் கட்டுப்பாடின்றி போக்குவரத்து சேவைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. சிங்கப்பூர்ப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கருத்து வெளியிடுகையில் ஆசிய பிராந்தியத்தில் அடுத்த சில ஆண்டுகளில் விமான சேவை வளர்ச்சியடைய இருக்கையில் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டமை மிகவும் பொருத்தமானதென்று தெரிவித்துள்ளார்.

# இந்துத்துவா கொள்கையைக் கைவிட்டது பா.ஜ

# தே.ஜனநாயகக் கூட்டணிக் கூட்டத்தில் முடிவு

(புதுடில்லி)

கூட்டணியின் நலன்கருதி அயோத்தியில் ராமர்கோவில் கட்டுதல், இந்தத்துவா கொள்கையை பாரதிய ஜனதாக் கட்சி கைவிட்டுள்ளது. கூட்டணித்தலைவரும் முன்னாள் பிரதமருமான அடல்பிகாரிவாஜ்பாய் தலைமையில் நடந்த தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூட்டத்தில் இவை பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்துத்துவ கொள்கையை பா.ஜ.கைவிட்டது தான் கடந்த மக்களவைத் தேர்தலில் தோல்விக்குக் காரணம். எனவே இந்துத்துவா கொள்கையை பா.ஜ.தீவிரமாக கையில் எடுக்க வேண்டும் என்று விசுவ ஹிந்து பரிசத் உட்பட சங்பரிவார் அமைப்புகள் பாரதியஜனதாக் கட்சியைக் கேட்டுள்ளன. இந்துத்துவாவை பா.ஜ.கையில் எடுத்தால் தே.ஜ.கூட்டணியில் இருந்து விலகுவோம் என்று பெர்னாண்டஸ் தலைமையிலான ஐக்கிய ஜனதாதளம் உட்பட சில கூட்டணி கட்சிகள் எச்சரிக்கை விடுத்தன. இதைத் தொடர்ந்து இதில் முடிவு எடுக்க முடியாமல் பா.ஜ.குழம்பியது. கடைசியில் கொள்கையை விட கூட்டணி தான் முக்கியம் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

தே.ஜ.கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் கூட்டணியின் தலைவர் வாஜ்பாய் வீட்டில் அவரது தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடந்தது. கூட்டணியின் அமைப்பாளரும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவருமான ஜார்ஜ் பெர்னாண்டஸ், பா.ஜ. தலைவர் அத்வானி, வெங்கையா நாயுடு உட்பட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இந்திய அரசியலுக்கு உகந்தது தே.ஜ. கூட்டணிதான். மத்தியில் 6 ஆண்டுகள் நிலையான வெற்றிகரமான ஆட்சியைக் கொடுத்தது என்ற வகையில அந்தக் கூட்டணியின் ஒற்றுமை தான் மிகவும் முக்கியமானது. அயோத்திப் பிரச்சினையில் சம்பநதப்பட்ட இருசாராரும் அமைதியான பரிபூரண நம்பிக்கை, நல்லெண்ணம் உள்ள சூழ்நிலையில் சமரச பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண்பதையே தே.ஜ.கூட்டணி விரும்புகிறது. அதேசமயம் இதில் நீதிமன்றம் கூறும் தீர்ப்பையும் அனைவரும் ஏற்க வேண்டும்.

6 மாத ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எந்த சாதனையையும் செய்யவில்லை. அனைத்து அத்தியாவசியப் பண்டங்கள் விலையும் உயர்ந்து விட்டது. சாதாரண மக்களின் நலனைக்காப்போம் என்று அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

தே.ஜ.கூட்டணி ஆட்சியில் பண வீக்கம் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு இருந்தது. அது தற்போது இரட்டிப்பு மடங்காக உயர்ந்து விட்டது. வட்டி விகிதங்களும் உயர்ந்து விட்டன. உள்நாட்டு உற்பத்தி குறைந்து விட்டது. விவசாயிகளின் குறைகளைத் தீர்த்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு தவறிவிட்டது. பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளத்துக்கு எதிரான கட்சிகளை ஒன்று திரட்டி அங்கு நடக்கும் மக்கள் விரோத ஊழல் ஆட்சியை அகற்றவேண்டும்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் சமீபத்தில் கூறிய திட்டத்தை இந்தியா ஏற்கக் கூடாது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரண்டு மணிநேரம் நடந்த கூட்டத்துக்குப் பிறகு ஜார்ஜ் பெர்னாண்டஸ் பேட்டி அளித்தார். அப்போது அவர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்.

இந்தக் கூட்டத்தில் இந்துத்துவா கொள்கை, பொது சிவில் சட்டம், காஷ்மீருக்கு விசேஷ அதிகாரம் வழங்கல், அரசியல் சட்டம் 370 போன்றவை பற்றி எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப் படவில்லை. இது பற்றி பேட்டி அளித்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் கூறுகையில் தே.ஜ. கூட்டணியின் திட்டம்தான் பா.ஜ.வின் திட்டம் என்று கூறினார். அயோத்தியில் ராமர் கோயில் கட்டியே தீருவோம். அது தேசத்தின் தாகம் என்று முன்பு பா.ஜ. தலைவர்கள் கூறி வந்தனர். இப்போது அயோத்தி பிரச்சினைக்கு சமரசபேச்சு மூலம் தீர்வு அல்லது நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கவேண்டும் என்று தங்கள் நிலையை மாற்றிக்கொண்டார். சங்பரிவார் அமைப்புகள் வற்புறுத்தி வந்த இந்துத்துவா கொள்கை யையும் கைகழுவி விட்டார்.

## ஜயேந்திரர் கைதைக்கண்டித்து கேரள மாநிலத்தில் ஹர்த்தால்

(திருவனந்தபுரம்)

ஜெயேந்திரர் கைதைக் கண்டித்து கேரளத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஹர்த்தால் காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

விஸ்வ ஹிந்து பரிஷத் (வி.எச்.பி) தலைமையிலான இந்து ஐக்கிய வேதி அமைப்பு இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்த ஹர்த்தால் காரணமாக நகரப் பகுதிகளில் போக்குவரத்துச் சேவை நடைபெறவில்லை. விஷமிகள் தாக்குதலில் பேருந்துகள் நாசமடைவதைத் தடுப்பதற்காக போக்குவரத்தை அரசுப் போக்குவரத்து நிறுவனம் நிறுத்திவிட்டது. எனினும் ஐயப்ப பக்தர்கள் வசதிக்காக சபரி மலைக்குச் செல்லும் பேருந்துக்கள் மட்டும் பொலிஸ் பாதுகாப்புடன் இயக்கப்பட்டன. கொச்சி நகரில் அரசு அலுவலகங்களில் குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்கள் இருந்தனர். வர்த்தக நிறுவனங் களும் கடைகளும் மூடப்பட் டிருந்தன. கொச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக் கழக தேர்வுகள் ஒத்திவைக்கப் பட்டன. மலப்புரம் மாவட்டத்தில் உள்ள திரூரில் பொலிஸ் ஜீப் மீது விஷமிகள் கல்வீசித் தாக்கு தல் நடத்தினர் இந்தத் தாக்கு தலில் இரு ஆட்டோக்கள் சேதமடைந்தன. தமிழகத்திலிருந்து கேரளத்துக்கு வந்த பாரவூர்தியை விஷமிகள் சேதப்படுத்தினர். இதுதொடர்பாக ஆறு பேரை பொலிசார் கைது செய்தனர். கண்ணூர் மற்றும் காசர்கோட் மாவட்டங்களில் ஹர்த்தால் முழு அளவில் நடைபெற்றது.

## கைது செய்தது தவறு

(கோவை)

ஜெயேந்திரரைக் கைது செய்தது மிகப் பெரிய தவறு என்று ஜனதாக் கட்சித்தலைவர் சுப்பிரமணியன சுவாமி கூறியுள்ளார். ஜெயேந்திரர் கைது செய்யப்பட்ட விஷயத்தில் உச்ச நீதிமன்றத்தில் வழிகாட்டுதல் பின்பற்றப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளர்ர்.

---

வீரவணக்கம்

## 3ஆம் ஆண்டு நினைவலைகளில்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 03 | | 18 |
| 03 | | 11 |
| 1966 | | 2001 |



தமிழீழத் தேசியத்துணைப் படைவீரர்.

### சற்குணராசா

*முத்துக்குமார் சற்குணராசா (குணம்)*

நி.மு: யாழ். மாவட்டம்
த.மு: தரன்குடியிருப்பு பாலியாறு வெள்ளாங்குளம்

18.11.2001அன்று மணலாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்" (5279)

---

## ஆண்டு மூன்றுநினைவுகளில்...

| மண்ணின் மலராய் | | மணலாற்றில் விதையாய் |
|---|---|---|
| 24 | | 18 |
| 02 | | 11 |
| 1972 | | 2001 |



### மேஜர் கலைவாசன்

(கணபதி செல்வராசா)

வரணி வடக்கு யாழ்.

வரணி மண்ணில் பிறப்பெடுத்து
வரிப்புலி சேனையில் இணைந்து
கலைவாசன் என்ற நாமத்தோடு
களங்கள் பல சென்றாயடா
மணலாறு மண்தனிலே களமாடி
காவியமாகிவிட்டாய்
ஆண்டு மூன்று ஆனதடா
உனைப்பிரிந்து
ஆனாலும் உன் பெயர் அழியாது
தேசமதில் நிலைத்திருக்கும்
உந்தனுக்கு எம் நெஞ்சமதில்
கோயில் அமைப்போம்
உன்நினைவுகளில் தினமிருப்போம்.

த.மு :- வன்னேரிக்குளம், சோலை.

குடும்பத்தினர், உறவினர், போராளிகள். (5280)

---

## 6ஆம் ஆண்டு ஆறாத்துயரலைகள்

| அன்னையின் மடியில் | | அரக்கரின் வலையில் |
|---|---|---|
| 25 | | 25 |
| 11 | | 11 |
| 1977 | | 1998 |



கிளி.ஸ்கந்தபுரம் 143/A இலக்கத்தில் வசிக்கும்

### சத்தியநாதன் தமிழ்க்குமரன்

*மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் (NDT) ஸ்கந்தபுரம்.*

*திதி: 18.11.2004*

பதினாறும் பெற்று புகழோடு வாழ்வாய்
என்று கட்டினோம் கோட்டை!
பாழ்போன துரோகிகளின் கண்பட்டதோ
குமரா!
ஆண்டுகள் ஆறு கடந்தாலும் - எங்கள்
செல்வ மகனே உன் பிரிவால் ஒவ்வொரு
நிமிடமும் துடித்துக்கொண்டு
வாழ்கிறோமடா!
இது தமிழனின் தலைவிதியா!

உன் பரிசுத்தமான ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்கந்தபுரநடன விநாயகரை வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் வேதனைப்படும்.

அப்பா, அம்மா சகோதரர்கள், மைத்துனர், அண்ணி

தகவல் :
அப்பா
ச. சத்தியநாதன்
(மல்லாவி மருதடி பிள்ளையார் களஞ்சியம்)

(சி-10760)

## அவுஸ்- நியூசிலாந்து முதலாவது டெஸ்ட்

## மெல்பேர்னில் இன்று ஆரம்பம்





(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று மெல்பேர்னில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் டெரன் லீமன் விளையாடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நியூசிலாந்து வீரர்களான கப்டன் பிளெமிங் நெதன் அஸ்லே ஆகியோர் விளையாடுவது குறித்து முடிவு எதுவும் தெரியவரவில்லை. இவ்விருவீரர்களும் போட்டியில் கலந்து கொள்ள உடல் தகுதி பெற்றாக வேண்டிய நிலையில் உள்ளனர்.

## அவுஸ்திரேலியா செல்லும் பாக். உத்தேச அணி தெரிவு

(கராச்சி)

அவுஸ்திரேலியா தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து அனுபவவீரர்கள் மோயின்கான், ரஷீத் லத்திப் நீக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் அவுஸ்திரேலியா செல்கிறது. மூன்று டெஸ்ட், (மூன்றாவது அணியாக, வெஸ்ட் இண்டீஸ் பங்கேற்கும்) முத்தரப்பு ஒருநாள் தொடர் ஆகியவற்றில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட்போட்டி பேர்த் நகரில் அடுத்த மாதம் 16 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான 25 வீரர்கள் அடங்கிய உத்தேச அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அனுபவ விக்கெட் கீப்பாளர்கள் மோயின் கான், ரஷீத் லத்திப் இருவருக்கும் அணியில் இடமில்லை.

“எதிர்கால அணியை உருவாக்கும் நோக்கில் 22 வயது இளம் கீப்பர் கம்ரான் அக்மல் அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது செயற்பாடுகள், அணித் தலைவர் இன்சமாம் உல் ஹக்கிற்குப் பிடித்திருக்கிறது.

உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பாகப் பந்து வீசிய ஆறு இளம் வேகப் பந்துவீச்சாளர்கள் உத்தேச அணியில் இடம்பிடித்திருக்கின்றனர். பயிற்சி முகாமில் சிறப்பாகச் செயற்படும் வீரர்கள் அணியில் இடம் பிடிப்பார்கள்.” என்கிறார் தேர்வுக் குழுத் தலைவர் வாசிம் பாரி 16 பேர் அடங்கிய அணி 24 ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. உத்தேச அணி விபரம்: இன்சமாம் உல்ஹக், சல்மான்பட், யாசீர் ஹமீத், இம்ரான்பர்கத், தாபிக்உமர், சோயப் மாலிக், யூசப் யோகனா, ஷாகித் அப்ரிதி, கம்ரான் அக்மல், அப்துல் ரசாக், யூனிஸ் கான், டேனிஷ்கனேரியா, சோயப் அக்தர் முகமதுசமி, ஷபிர் அகமது, ராணா நவேத் உல்ஹசன், ஆசிம்கமால், அமிர்பஷீர், ரியாஸ் அப்ரிதி, பஷீத்கான்,பைசல் இக்பால், அசார் ஷைதி, பைசல் அக்தர், மிஸ்பா உல் ஹக் மற்றும் முகமது கலில்.

## ஏனைய பந்துவீச்சாளர்கள் பற்றி கருத்து வெளியிட வேண்டாம்

### முரளிதரனுக்கு இல.கிரிக்கெட் நிறுவனம் அறிவுறுத்து



சிறிலங்கா கிரிக்கெட் அணியின் சுழல்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனை ஏனைய விளையாட்டு வீரர்களின் பந்துவீச்சு தொடர்பாகக் கருத்து வெளியிட வேண்டாமென சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளதாக அதன் பேச்சாளர் இளங்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் தொடர்பாக முரளிதரன் கருத்துவெளியிட்டதைத் தொடர்ந்து இவ்வாறு கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிளட்மெக்ராட், யூசின்சிளஸ்பீ, பிரட்லி ஆகியோரின் பந்துவீச்சு தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டிருந்தார். அவர்களின் பந்துவீச்சு முறையும், எமது பந்துவீச்சு முறையும் ஒத்திருப்பதாக முரளிதரன் தெரிவித்திருந்தார். ஆயினும் தனது கருத்துக்களை ஊடகங்கள் திரிபுபடுத்திக் கூறியிருப்பதாக முரளிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முரளியின் குற்றச்சாட்டு குறித்து அவு.முன்னணி வீரர் வருத்தம்!

(மெல்போர்ன்)

முரளிதரனின் இந்தப் புகாருக்கு அவுஸ்திரேலிய தரப்பில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. துவக்க ஆட்டக்காரர் ஹைடன் கூறுகையில், “ டெஸ்ட் அரங்கில் 532 விக்கெட் வீழ்த்திய பெருமைமிக்க முரளிதரன் இவ்வாறு கூறியிருப்பது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இந்தப் புகார் காரணமாக சர்வதேச கிரிக்கெட்டில் இவருக்கு ஆதரவு எதுவும் கிடையாது. மாறாக நல்ல நண்பர்களைத்தான் இழப்பார்” என்றார். முரளிதரன் தரும் புள்ளி விபரங்களுக்கு ஆதாரம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்கிறார் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சங்க தலைமை நிர்வாகி டிம்மே.

இவர் கூறுகையில் “முரளிதரனின் புகாரைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன் இவர் சொல்லும்அளவுக்கு பந்துவீச்சாளர்கள் கையை வளைப்பதாகத் தெரியவில்லை.




## தெ. ஆபி-இந்.தலைவரணி ஆட்டம் சமநிலையில் முடிவு!

கிரேமி ஸ்மித் தலைமையிலான தென் ஆபிரிக்கா கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வருகின்றது. இரு அணிகளும் வருகின்ற 20ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளன. முன்னதாக பயிற்சிப் போட்டியாக இந்திய வாரியத் தலைவர் அணிக்கு எதிரான 3 நாள் போட்டியில் தென் ஆபிரிக்கா விளையாடியது இந்த ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா கடும் போராட்டத்தில் ஆட்டத்தைச் சமன் செய்தது.

முதல் இன்னிங்சில் தென் ஆபிரிக்கா 5 விக்கெட் இழப்பிற்கு 226 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியதைத் தொடர்ந்து ஆடிய இந்திய வாரியத்தலைவர் அணி 361 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது இந்தப் போட்டியில் தினேஷ்மொங்கியா 148 ஓட்டங்கள் எடுத்தன. தேசிய அணியில் மீண்டும் இடம் பிடிக்கும் நோக்கில் உள்ள பதானி கடைசி வரை ஆட்டம் இழக்காமல் 74 ஓட்டங்கள் எடுத்தார்.

135 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தென் ஆபிரிக்கா 2ஆவது இன்னிங்ஸ் ஆட்டத்தை தொடங்கியது. 108 ஓவர்களுக்கு 5 விக்கெட்களை இழந்த தென்ஆபிரிக்கா அணிக்கு பின் வரிசை ஆட்ட அணியினர் கைகொடுத்தனர். ஆட்டமுடிவில் தென் ஆபிரிக்கா 172 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்தது. இதனால் இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது. சுழல்பந்து வீச்சாளர் ரமேஷ்பவார் 3 விக்கெட்டுகள் சாய்த்தார்.

நேற்றைய போட்டியில் தென் ஆபிரிக்காவின் நம் பிக்கை நாயகன் காலிஸ் கடைசி கட்டத்தில் ஆட வந்தார். 2-ஆவது நாள் ஆட்டத்தின்போது காலிஸ் காயம் அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## படகுப் போட்டி வீராங்கனை வறுமையால் தற்கொலை!

### கேரளாவில் நடந்த துயரம்

சர்வதேச படகுப்போட்டி வீராங்கனை ஷோபினி (வயது 21) கேரளாவைச் சேர்ந்த இவர் நேற்று முன்தினம் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முதுகெலும்பில் ஏற்பட்ட நோய்க்கு கடந்த 5 மாதங்களாக அவர் சிகிச்சை பெற்று வந்தார். இதற்காக அவரது குடும்பத்தினர் அதிக பணத்தைச் செலவழித்தனர். நிதிப்பற்றாக்குறை காரணமாகவே அவர் தற்கொலை செய்து இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

தேசிய அளவில் 30 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.ஷோபினி 2001 ஆம் ஆண்டு நடந்த ஆசிய சம்பியன் போட்டியில் பதக்கம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரியா ஷெரபோவாவிடம் தோற்றது அதிர்ச்சிக்குரியதல்ல



முன்னணி வீராங்கனைகளுக்கான செரீனா வில்லியம்ஸ் டபிள்யூ ரி.ஏ.டெனிஸ் போட்டியில் ஏற்பட்டதோல்வி தமக்கு எவ்வித அதிர்சியையும் தரவில்லையென அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற டபிள்யூ. ரி.ஏ. டெனிஸ் சம்பியன் போட்டியில் ரஷ்யாவின் மரியாஷெரபோவாவிடம் தோல்வியடைந்தமை தெரிந்ததே.

செரீனா வில்லியம்ஸ் இது தொடர்பாக தெரிவிக்கும்போது திறமையான இளம் ரஷ்ய வீராங்கனையான மரியாஷெரபோவாவிடம் தாம் அடைந்ததோல்வி பாரதூரமானதல்ல எனவும், கடந்த ஆண்டு தாம் சாதித்ததைப்போன்று இவ்வாண்டு மரியா ஷெரபோவா சாதிப்பாரெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் சனவரிமாதம் ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலியப் பகிரங்க மகுடத்திற்கான போட்டியில் தானும் தனது சகோதரியும் பிரகாசிப்பது உறுதி எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## சச்சின் லக்ஸ்மன் போன்ற தலைசிறந்த வீரர்களுக்கு பந்துவீச ஆவலாய் உள்ளேன்

### தென்னாபிரிக்க சுழல்பந்து வீச்சாளர்

(ஜெப்பூர்)

“சச்சின், லக்ஸ்மன் போன்ற தலை சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்குப் பந்து வீசும் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் ” என்கிறார் தென் ஆபிரிக்க கிரிக்கெட் ஸ்பின்னர் ரொபின் பீற்றர்சன்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியா வந்திருக்கிறது. முதல் டெஸ்ட் கான்பூர் நகரில் 20 ஆம் திகதி துவங்குகிறது. தற்போது இந்திய கிரிக்கெட்சபை தலைவர் அணிக்கு எதிராக ஆட்டத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். தென் ஆபிரிக்க வீரர்கள் அந்த அணியில் இளம் புதுமுக வீரர்களே இம்முறை நிறைய இடம் பிடித்துள்ளனர்.

அனுபவ ஸ்பின்னர் நிக்கி போஜே அணியில் இல்லை அவருக்குப் பதில் ஒரே ஸ்பின்னராக வந்திருப்பவர் ரொபின் பீற்றர்சன் அதிக சர்வதேச அனுபவம் கிடையாது ஆனாலும் நம்பிக்கையாக காத்திருக்கிறார்.

“கிரிக்கெட்டுக்கு நான் புதிது என்பதுதான் பலமே எனது பந்து வீச்சு எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஒருவேளை நான் அனுபவமற்ற புது வீரர் என்று நினைத்து இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அலட்சியமாக விளையாடினால் எனது வேலை இன்னும் சுலபமாகி விடும் இந்திய ஆடுகளங்கள் ஸ்பின்னுக்குச் சாதகமானவை என்று கேள்விப்பட்டேன் சீனியர் வீரர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறேன் சச்சின், லக்ஸ்மன் போன்ற உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து வீச ஆர்வமாகக் காத்திருக்கிறேன்” என்கிறார் ரொபின் பீற்றர்சன்.

### -மாவீரர் கிண்ணத்திற்கான-

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கால அட்டவணை அறிவிப்பு

மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை தொடக்கம் 22ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. மேற்படி போட்டி கரைச்சி பிரதேசத்திற்கான உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணிக்கும் பளை, கண்டாவளை பிரதேசத்திற்கான போட்டி பரந்தன் விளையாட்டு மைதானத்திலும், (பி.ப 2.00 மணிக்கும்) நடைபெறவுள்ளது என்பதை அனைத்து விளையாட்டுக் கழகங்களிற்கும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துக்கொள்கிறார்.

## மாவீரர் வெற்றிக்கிண்ண நாளைய ஆட்டங்கள்

மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை நடைபெறவுள்ள போட்டிகளில் கண்டாவளைக் கோட்டத்திற்கான போட்டிகளில் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழகம் விளைபூமி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாளை மாலை இரண்டு மணிக்கு மோதவுள்ளது.

இதே வேளை பளைக் கோட்டத்திற்கான போட்டிகளில் சோலை விளையாட்டுக் கழகம் வானவில் விளையாட்டுக் கழகத்துடன் நாளை மாலை 3.15 மணிக்கு மோதவுள்ளது.

ஆதவன் விளையாட்டுக் கழகம் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாளை மாலை 4.30 மணிக்கு மோதவுள்ளது.

## சிந்தனைக்கு



சமூகப் புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கக் கூடியதாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சமாதானத்திற்கு விரோதமானவர்கள்.

சிறிலங்காவின் சனாதிபதியாகப் பத்து ஆண்டுகள் பதவி வகித்த பின்னரும் சந்திரிகா குமாரதுங்கவின் குணமும் மாறவில்லை. பேச்சும் மாறவில்லை. வரலாற்றில் இருந்து அவர் பாடம் எதையும் கற்றுக கொண்டதாகவும் இல்லை. அவர் பக்குவப்படவும் இல்லை.

இவை யாவற்றிற்கும் எடுத்துக்காட்டாக அமைந்ததாகவே நேற்று முன்தினம் அவர் தேசிய தொலைக்காட்சிச் சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்த கருத்துக்கள் உள்ளன. இப்பேட்டியில் மேற்கூறப்பட்ட பண்புகளை நிருபணம் செய்யப் பல விடயங்கள் இருப்பினும் அவற்றில் ஒரு விடயத்தை மட்டும் சுட்டிக்காட்டுவதே மேற்கூறப்பட்டவாறு அவரின் பண்புகள் எவையும் மாற்ற முடியவில்லை என்பதை எடுத்துக் காட்டப் போதுமானதாகும்.

இப்பேட்டியில், சனாதிபதி சந்திரிகா தான் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும், விடுதலைப்புலிகள் அடுத்த மாதத்திற்குள் இது தொடர்பான முடிவை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் காலக்கெடு ஒன்றை விதித்துள்ளார். இதில் ஒன்று பேச்சு வார்த்தை தொடர்பானது. மற்றையது காலக்கெடு தொடர்பானது.

சனாதிபதி சந்திரிகா எப்பொழுதுமே சமாதானத்திற்கோ அரசியல் தீர்விற்கோ ஏற்றவகையில் பேசுபவர் இல்லை. இது இவரது குண நலனாகவும் இருக்கலாம். அன்றி தனது இராஜதந்திரமாகவும் இதனை அவர் கொள்ளலாம். குறிப்பாகச் சுட்டிகாட்டுவதாக இருந்தால், சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அவர் பிரஸ்தாபிக்கும் போதும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள், கொலைக்காரர்கள் என்ற பதங்களை அவர் தவிர்த்துக் கொள்வது இல்லை.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் இராஜதந்திரமில்லை. வரட்டுத்தனம், சமாதானத்திற்கு எதிராக மற்றையவர்களைச் சீண்டும் கேவலமான வழிமுறை, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மாறாக வெறுப்பேற்றும் செயல்முறை, பரஸ்பர நல்லுறவு, புரிந்துணர்வு என்பன இன்றிச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் சந்திப்பதென்பது சாத்தியமற்றது. குத்துச் சண்டை வீரர்கள் போல் அறிக்கைகளை விட்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பது எத்தனை தூரம் சாத்தியப்பாடானதாகும்.

அடுத்ததாக, சனாதிபதி சந்திரிகா உண்மையாகவும், யதார்த்தமாகவும் எப்பொழுதுமே பேசியதில்லை. விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொண்டதில் இருந்தே பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்பதை சிறிலங்கா அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் உறுதிபடக் கூறிவருகின்றனர். அத்தோடு சிறிலங்கா அரசோடு ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியுள்ளனர். மறுபுறத்தில் பார்த்தால் சிறிலங்கா ஆயுதப் படைகள் மேற்கொள்ளும் யுத்த நிறுத்த மீறல்கள், சமாதான முயற்சிகளை முடிவிற்குக் கொண்டுவரத்தக்கதான விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பனவற்றையும் தாண்டி ஆச்சரியத்துக்குரிய வகையில் அமைதி காத்து வருகின்றனர் .

ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்து, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போட்டது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே. அதன் பின்னர் இன்று சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்குரிய ஒருமித்த கருத்தின்றி இருப்பதும், அவரது ஐ.ம.சு. முன்னணி அரசாங்கமே.

இந்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் முடிவைத் தெரிவிக்க வேண்டும் எனச் சந்திரிகா குமாரதுங்க கோருவது சிறுபிள்ளைத்தனமானது. புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பித்துப் பாருங்கள் எனச் சவால் விடுக்கும் கூட்டணிக் கட்சியை - ஜே.வி.பி.யை - வைத்துக் கொண்டு பழியைப் புலிகள மீது சுமத்திவிட மேற்கொள்ளும் அணுகுமுறை கேவலமான குறுக்கு வழி அரசியல்.

அடுத்ததாகச் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக புலிகளுக்குக் காலக்கெடு விதித்துள்ளமை ஒருவகையில் வினோதமானதும், கேலிக்குரியதும் ஆகும். சந்திரிகா கடந்த காலத்திலும் பல காலக்கெடுக்களை விதித்தவர் என்பது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். மாமனார் அனுருத்த ரத்தவத்தையுடன் சேர்ந்து 1995இல ஏப்ரல் யுத்தத்தை ஆரம்பித்தவர். மாதக் கணக்கிலும், வருடக்கணக்கிலும் காலக்கெடுக்களை விதித்துப் பின்னர் கண்ட பலன் என்ன என்பதும் சகலருக்கும் தெரியும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா அதன் பின்னரும் இக்காலக்கெடு விதித்தலை கைவிடாமல் போனதில் இருந்தே இவர் வரலாற்றில் அன்றி நேரடி அனுபவத்தின் மூலமும் எதையும் கற்றுக் கொள்ளாதவர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அவ்வாறு இல்லாதுவிடில், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான காலக்கெடு ஒன்றை அவர் விதித்திருக்கமாட்டார். அத்தோடு, அதனை ஒரு நிபந்தனை போன்று அறிவித்தும் இருக்கமாட்டார்.

சனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய போக்கை விடுதலைப் புலிகளும் நன்கு விளங்கிக் கொண்டுள்ளதன் வெளிப்பாடே சனாதிபதி சந்திரிகாவை மட்டும் நம்பி பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் பயனில்லை என்ற முடிவிற்கு அவர்கள் வந்துள்ளமைக்கும், சமாதானம் தொடர்பான கொள்கையை அரசாங்கம் பகிரங்கப் படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தமைக்கும் அடிப்படையாக இருந்திருத்தல் வேண்டும்.

# பாதுகாப்பு ஒப்பந்தத்தை வாபஸ் பெற இந்தியாவிடம் கூட்டமைப்பு கோரும்

உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் உத்தியோக பூர்வமாக விடுக்கவிருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய பிரதமர் மன் மோகன்சிங்கிற்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்குத் தயாராகி வருவ தாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய அரசாங்கத்துக்கு விரைவில் அனுப்பவிருக்கும் இது தொடர்பான மகஜரில் குறிப்பிட்ட விடயம் குறித்து நேரில் பேசுவதற்குத் தனது விருப்பத்தையும் இந்தியாவிற்கு தெரிவிக்கும் என்றும், தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் உட்பட ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த விருப்பதாகவும் தெரிய வருகின்றது.

# மட்டு நகரில் உ.பா.பிரதேசத்தில் இரண்டு கடைகள் உடைத்து திருட்டு

மட்டக்களப்பு நகரில் 48 மணித்தியாலத்திற்குள் இரண்டு அரிசிக் கடைகள் இரவு நேரத்தில் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு மிக்க பிரதேசமொன்றில் இடம்பெற்ற இந்தக் கொள்ளைகள் குறித்து நகர வர்த்தகர்கள் அச்சமும் பீதியும் அடைந்துள்ளார்கள்.

24 மணி நேரமும் பொலிஸ் மற்றும் இராணுவ கண்காணிப்பிற்கு உட்பட்ட மாநகர சபைக்குரிய சந்தைக் கட்டட தொகுதியிலுள்ள கடைகளில் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இரவுகளில் இந்தக் கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றருக்குட்பட்ட தொலைவில் இந்த கொள்ளைகள் இடம் பெற்றிருப்பது தமது வியாபார நிலையங்களுக்குரிய பாதுகாப்பை கேள்விக் குறியாக்கியிருப்பதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். அரிசி கொள்ளையடிக்கபட்டு பாரவூர்திகளில் ஏற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 2 இலட்சத்திற்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சர் காதரின் பிணை கோரும் மனு நிராகரிப்பு

முன்னாள் கூட்டுறவு அமைச்சர் அப்துல் காதரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரியதை கொழும்பு பிரதான நீதிபதி நேற்று நிராகரித்துள்ளார்.

இவரை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் சரோஜினி குசல வீரவர்தன உத்தரவிட்டுள்ளார். முன்னாள் அமைச்சருக்கு எதிரான வழக்கு விசாரிக்கப்பட்ட வேளை இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் தலைவரான ருவான் குணசேகர சாட்சியளிக்கையில். தமது விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் பட்டதெனத் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி நிதியத்திற்குச் சொந்தமான 10 இலட்சம் ரூபா பணத்தை தவறான வழியில் பயன்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரவிகருணாநாயக்காவின் முன் பிணை கோரும் மனு தீர்ப்பு ஒத்திவைப்பு

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தான் கைது செய்யப்படுவதை எதிர்பார்த்து தாக்கல் செய்த பிணை மனு மீதான தீர்ப்பை மேல் முறையீட்டு நீதிமன்றம் அடுத்த மாதம் 16 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது.

கொழும்புக் கோட்டை நீதிபதி, இவர் கைது செய்யப்பட்டால் உடனடியாகவே இவரைப் பிணையில் விடுதலை செய்ய அனுமதிக்கும் உத்தரவைக் கூறியிருந்தார். சட்டமா அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.

# பயன்படுத்தப்பட்ட வாகன இறக்குமதித் தீர்வை தடைநீடிப்பு

பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்யும் போது புதிதாக விதிக்கப்பட்ட மேலதிக வரியை இரத்துச்செய்யுமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் நிதி யமைச்சின் இந்த அறிவிப்புக்கு எதிராக எதிர்வரும் முப்பதாம் திகதி வரை இடைக்கால தடையை நீதிமன்றம் நீடித்தது .ஏற்கனவே இந்தத் தடை நேற்று வரை விதிக்கப் பட்டிருந்தது. நிதியமைச்சுக்கு எதிரான இந்த வழக்கை வாகன இறக்குமதியில் ஈடுபட்டுள்ள சுமார் 25 நிறுவனங்கள் தாக்கல் செய்திருந்தன. அமைச்சரவையின் அனுமதியில்லாமல் இந்த வரியை நடைமுறைப்படுத்தியமை செல்லுபடியற்றதென தீர்ப்பு வழங்கக் கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (32)

# 32 போலி மரத் துப்பாக்கிகள் வீட்டில் வைத்திருந்தவர் கைது

தென்பகுதியிலுள்ள வீடொன்றினுள் இருந்து மரத்தால் செய்யப்பட்ட 32 போலித் துப்பாக்கிகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

தாம் கைது செய்த சந்தேக நபர் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்தமையால் வெலிகம பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மரத் துப்பாக்கிகள் ஓர் திரைப்படத்தின் படப்பிடிப்பிற்காக உருவாக்கப் பட்டதென அவர் முதலில் தெரிவித்துள்ளார். பின்னர் பாடசாலை பரட் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க தயாரிக்கப்பட்டதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடந்த ஆண்டில் மட்டும் 8 ஆயிரம் பேர் நிலக்கண்ணிவெடியினால் பாதிப்பு

(லண்டன்)

கடந்த ஓராண்டில் மட்டும் எண்ணாயிரம் பேரிற்கு கூடுதலானோர் நிலக்கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்தும், ஊனமடைந்து உள்ளதாக நிலக்கண்ணிவெடிகள் தடைசெய்யப்படவேண்டும்மெனப் பிரசாரம் செய்து வரும் அமைப்புக் கூறியுள்ளது.

உலகில் தற்போது நிலக் கண்ணிவெடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை மூன்று சதவீதத்தில் குறைந்துள்ளதாக அந்த அமைப்புக் கூறியுள்ளது. இதே வேளை ஓராண்டில் பதினைந்தாயிரம் முதல் இருபதாயிரம் வரையான பாதிப்புக்கள் பதிவு செய்யப்படாமல் போகின்றன வென இந்த அமைப்பின் தோற்றுனர்களில் ஒருவரான ஜோலி வில்லியம்ஸ் கூறியுள்ளார்.

உலகெங்கிலும் நிலக்கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்டோர் மூன்று இலட்சம் பேர் இருக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பட்டதாரிகள் நியமன தாமதத்தினால் தெற்கில் தமிழர் கல்வி பாதிப்பு!

தென்னிலங்கையிலுள்ள பல மாகாண சபைகள் தமிழ்ப்பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்காமையால் தமிழ் மொழி மூல மாணவர்கள் பலரின் உயர்கல்வி பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தென். வடமேல், வட மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களே தழிழ்ப் பட்டதாரி ஆசிரிய நியமனங்கள் தொடர்பாக மாற்றான் தாய் மனப்பாங்குடன் செயற்பட்டு வருகின்றன. இம் மாகாண முதல்வர்களிடம் தமிழ்மொழி மூல ஆசிரிய நியமனங்களை வழங்கும்படி கோரிக்கை விடுத்தும் தொடர்ந்தும் அவர்கள் மௌனம் சாதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் சில மாகாண முதல்வர்களிடம் இக்கோரிக்கையை விடுத்தபோது, சிங்கள மொழி மூலம் கற்பிக்கும்படி தெரிவித்து உள்ளனர், வடமேல் மாகாண முதல்வர் அதுல விஜேசிங்க பகிரங்கமாகவே மேடையில் இதைத் தெரித்துள்ளார். இந்நிலை தொடர்ந்தால் தென்னிலங்கை தமிழ மாணவர்களின் கல்வி நிலை வெகுவாகப் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-பூந்தோட்டப்பகுதியில்-

## படையினரால் அமைக்கப்பட்ட காவலரண் இனந்தெரியாதோரால் தாக்கியழிப்பு

பூந்தோட்டப்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் வகையில் படையினரால் புதிதாக அமைக்கப்பட்ட காவலரண்களில் ஒன்று செவ்வாய் இரவு இனந்தெரியாதவர்களால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் பூந்தோட்டம் சந்தியில் குளக்கட்டின் மீது வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரி வீதியின் பொது மயானத்திற்கு முன்பாகவும் ,அரச கால்நடை பண்ணை முன்பாகவும் மூன்று புதிய காவலரண்களைப் படையினர் அமைத்து வந்திருந்திருந்தனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது படையினரால் பொது மயானத்திற்கு முன்பாக அமைத்து முடிக்கப்பட்ட காவலரனையே செவ்வாய் இரவு இனந்தெரியாதவர்களால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. இக் காவலரனில் இது வரை படையினர் கடமையில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (10)

## சமாதான நடவடிக்கையைப் பலப்படுத்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை பொருத்தமாக மாற்றவேண்டும்

-சர்வதேச சமாதான ஆலோசகர் நிக்கலஸ்-

இலங்கையில் சமாதான நடவடிக்கைளை பலப்படுத்துவதற்கு போர் நிறுத்த ஒப்பந்தம் தற்போதைய நிலைக்கு பொருத்தமான வகையில் தாயாரிக்கப்பட வேண்டுமென சர்வதேச சமாதான ஆலோசகர் பேராசிரியர் நிக்கலஸ் கேசம் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவின் முன்னாள் சனாதிபதியாக இருந்த நெல்சன் மண்டேலாவின் சட்ட ஆலோசகராக இருந்த இவர் இலங்கையின் போர் நிறுத்தத்தை பலப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில்

போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் அதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு அமைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும் தற்போதைய போர் நிறுத்த உடன்படிக்கை இரண்டு வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதி இது அரசியல் ரீதியல் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு இது ஓர் முக்கிய விடயமாகும். மக்களின் அர்ப்பணிப்பே போர் நிறுத்த உடன்படிக்கையும் சமாதானமும் இவ்வளவு காலமும் நீடித்துச் செல்வதற்கு காரணம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

### புலிகளின்..

ஒலிபரப்பாக இடம்பெறவுள்ளது. 26.11.2004 தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் சிறப்பு ஒலிபரப்பு காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை இடம்பெறும்.

மாவீரர் நாள் சிறப்பு ஒலிபரப்பு 27.11.2004 அன்று காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரையும் இடம்பெறும்.

## தேசிய எழுச்சிப் பேரவை காரியாலயம் வவு.வில் திறப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் காரியாலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா பஜார் வீதியில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்க கடைத்தொகுதியிலேயே இக்காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட தேசிய எழுச்சி அமைப்பின் தலைவர் செ.சபாநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் காரியாலயத்தினை வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும், வவுனியா மாவட்ட தேசிய எழுச்சி அமைப்பின் உபசெயலாளருமாகிய ப.குமாரகுலசிங்கம், மாவட்ட ஏற்பாட்டுக்குழுத் தலைவர் சூ.ஞானப்பிரகாசம் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் அமைப்பின் செயலாளர் சு. ஜெயச்சந்திரன், பொருளாளர் து.டீ.கிறிஸ்தோப்பர் உறுப்பினர்களாகிய ஆ.செந்தில்நாதன், ச.குலதேவராஜா, வை.செ. தேவராஜா, அ.சாந்தன் கிராம சேவை அலுவலர் வீ.ஜெகசோதிநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (10)

### தமிழீழத்..

யல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது. நேற்றுக்காலை அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும், யாழ்.மத்திய கல்லூரி மாணவர் குழு ஒன்றும் கிளிநொச்சி சென்று நடுவப்பணியகத்தில் வைத்து (பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கேடயத்தினை) மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார், செயலாளர் சிவகரன் ஆகியோர் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளரிடம் கையளித்தனர். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர்கள் அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கையளித்தனர். இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பொறுப்பாளர் ந.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (36)

### திருமலை...

எடுக்கப்படவில்லை. இதுபற்றி பின்னர் சந்திப்புக்கள் நடத்தப்பட வேண்டும் என முடிவெடுக்கப் பட்டது.

இவ்வாறு நேற்றைய அரசியல் துறைப்பொறுப்பாளர் அவர்களுடனான சந்திப்புக்குறித்து கண்காணிப்புக்குழுப்பேச்சாளர் தெரிவிததார்.

அவர்மேலும் கூறுகையில் இதேவேளை கடந்த சில மாதங்களாக மாவட்ட அளவு பல சந்திப்புக்களில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்று வருகின்றார்கள்.

இவற்றில் விடுதலைப்புலிகளின் இராணுவத்தளபதிகளும் பங்கேற்க வேண்டுமென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் டொன்புறூவ் கொவ்டே கேட்டுக்கொண்டபோது, அதனைத் தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டார் என்றார்.யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஜோன்மாஸ்ரர் ஷோல்கெம்.

நாகர் கோவிலில் என்ன பிரச்சினை என இவரிடம் கேட்டபோது இராணுவத்தின் நிலைகளுக்கும், விடுதலைப்புலிகளின் நிலைகளுக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. நாகர்கோவில் பகுதியில் இரண்டு தரப்பினரும் மிக நெருக்கத்தில் இருக்கிறார்கள். இரண்டு தரப்புமே பின்வாங்கியாக வேண்டும் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரியிருக்கின்றது. ஆனால் இதனை இலங்கை இராணுவம் ஏற்கவில்லை. விடுதலைப்புலிகள் தான் தங்களுடைய தரப்பை நோக்கி முன்னேறி வந்திருக்கிறார்கள் எனக் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இது குறித்து இருதரப்பினரிடமும் பேசிவருகின்றோம் என்றார் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் பேசவல்ல அதிகாரியான ஜோன்மாஸ்ரர் ஷோல்கெம்.

அடுத்த சந்திப்பு எப்போது என அவரிடம் கேட்டபோது அது விரைவிலேயே இருக்கும் என நான் நம்புகிறேன். நேற்றுத்தான் யாழ்.குடாநாட்டின் தலைமைத் தளபதியை கண்காணிப்புக்குழுவின் தலைவர் சந்தித்தார். ஆக இரண்டு தரப்புடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம் என்றார் அவர்.

-வான் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த-

## பொலிசாரைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துக!

(வவுனியா செய்தியாளர்)

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை அநுராதபுரத்தில் உள்ள யாழ்ப்பாணம் சந்தியில் வான் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிசாரைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு வவுனியா மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த வானை யாழ்ப்பாணம் சந்தியில் வழிமறித்த பொலிசார் வாகனத்தை சோதனை இட்டபின் தொடர்ந்து செல்ல அனுமதித்து விட்டு அவ்வானின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் இதனால் வானில் பயணித்த இராமலிங்கம் சுப்பிரமணியம் (வயது 60) என்பவா உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மாவட்ட நீதிபதி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிசாரைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு வவுனியாப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (10)

## மட்டக்களப்பு பகுதியில் குடும்பஸ்த்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு கொண்டையன் கேணியில் 49 வயதுடைய கிருஸ்ண பிள்ளை தணிகாசலம் என்ற குடும்பஸ்த்தர் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் என செய்திகள் கூறுகின்றன. நேற்றுமுன்தினம் 8.00 மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற யுவராஜன் என்பவரால் கிருஸ்ணபிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது கிருஸ்ண பிள்ளை தொலைக் காட்சிச் செய்தி பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு வந்த யுவராஜன் கிருஸ்ணபிள்ளையின் தலையில் ரி-56 ரக துப்பாக்கி மூலம் சுட்டு விட்டு [illegible]ப்பிச் சென்றுள்ளதாகவும், அ[illegible]ள் மேலும் கூறினர். இக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதால் இது தனிப்பட்ட [illegible]லையாக இருக்கலாமென வாழைச்சேனைப் பொலிசார் கருதுகின்றனர்.

## புத்தளத்தில் மு.கா. மாற்றுக்குழு ஆதரவாளர் மீது தாக்குதல்

புத்தளத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற அரசியல் வன்முறைச் சம்பவமொன்றின்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழு ஆதரவாளர் இருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிசாத் பதியுதீன் கலந்து கொள்ளும் வைபவமொன்று தொடர்பாக சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த சமயம் இவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தின் போது, அவரது அமைச்சுக்குரிய வாகனமொன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் ஒருவர் புத்தளம் பொலிசால் தேடப்பட்டு வருகின்றார்.

## உண்டியலை உடைத்து திருடமுயன்றவர் பிடிபட்டார்

கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் அமைந்திருக்கும் பிள்ளையார் ஆலயத தின் கோவில் உண்டியலை உடைத்துத் திருட முயன்ற ஒரு இளைஞன் பொது மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, கிளிநொச்சி காவல் பணி மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி காவல் பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர். (15)

### கூட்டுப்படைத்..

மென அவர் முப்படையைச் சேர்ந்த் அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை முப்படைகளின் தளபதி தயா சந்தகிரியின் வருகையால் ஏ 9 போக்குவரத்து ஒரு மணி நேரம் தடைப்பட்டது. இவர் நேற்று முகமாலை முன்னரங்க நிலைகளைப் பார்வையிட்டார். இதனால் மக்களின் போக்குவரத்து ஒரு மணி நேரமாகத் தடைப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கி வந்த சுமார் நூறிற்கு மேற்பட்ட பயணிகள் வாகனம், காலை பத்து மணியளவில் நோயாளிகளை ஏற்றிவந்த அம்பியுலன்ஸ் வாகனம் என்பன உசன் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டன. இதனால் மக்கள் பெரும் ஆத்திரம் அடைந்தனர். அத்தோடு பயணத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் இராணுவத்துடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து 11.00 மணியளவில் போக்குவரத்து வழமைக்கு வந்தது.

இதே போன்ற சம்பவங்கள் குடாநாட்டிற்கு உயர் அதிகாரிகள் வருகையால் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. (36,27)

### வவுனியாவில்..

உத்தரவிட்டுள்ளார் ஊர்காவல் படையாளியான டி.பி. சுரவீர என்பவர் தனது காணியினை அடாவடித்தனமாக பொலிசார் பிடித்து அத்து மீறி இருப்பதாக பலமுறை பொலிசாருடன் பிரச்சினைபட்டிருக்கிறார். இதன் காரணத்தால் அவர் வேலையில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் பணியில் இணைந்து பணியாற்றி வந்துள்ளார். சம்பவதினம் மதியம் இவரின் மனைவி இனம் தெரியாதவர்களால் வெட்டி கொல்லப்பட்ட சமயம மேற்படி நபரும் கடுமையன காயங்களுக்குள்ளாகி அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தாயாரான மேற்படி பெண் நிறைமாதக் கர்ப்பிணி என்றும் பொலிசா தெரிவிக்கின்றனர். பிள்ளைகள் இருவரும் பேத்தியாரின் வீட்டுக்குச் சென்ற சமயம் இந்த சம்பவம் இடமபெற்றுள்ளது. பெண் பல முறை கத்தியால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்ததார் அயல் வீட்டார் வீட்டுக்குச் சென்ற சமயமே கணவன் காயமாகவும் மனைவி இறந்த நிலையில் இருந்ததையும் அடுத்து பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் எதுவும் பொலிசாரால் மீட்கப்படவில்லை (21)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.